வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 14.10.2021 வியாழக்கிழமை | இதழ் : 313 | பக்கங்கள் : 16

## 11 தமிழ் இளைஞர்கள் கடத்தல்

# கரன்னகொடவுக்கு எதிரான குற்றப்பத்திரிகை வாபஸ்!



கொழும்பு, ஒக்ரோபர் 14

**முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் வசந்த கரன்ன கொடவுக்கு எதிரான குற்றப்பத்திரிகையை தொடர்ந்தும் முன்னெடுக்கப் போவதில்லை என்று சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு நேற்று அறிவித்தார்.**

நாட்டில் போர் நீடித்த காலப் பகுதியில் - 2008, 2009ஆம் ஆண்டில் வெள்ளை வான்களை பயன்படுத்தி கொழும்பில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு கப்பம் பெற்ற பின்னர், காணாமல் ஆக்கப்பட்டனர். இந்த வழக்கில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொடவை பிரதான சந்தேக நபராக குறிப்பிட்டு 13 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கின் மீதான குற்றச்சாட்டுக்களையே இனியும் தொடரப் போவதில்லை என்று சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

வசந்த கரன்னாகொடவால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு, நீதிபதிகளான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக கனேபொல ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச

15



இந்து - தமிழ் பாரம்பரிய முறையில்

## அலரி மாளிகையில் நவராத்திரி விழா!

கொழும்பு, ஒக். 14

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நவராத்திரி விழா அலரி மாளிகையில் இந்து - தமிழ் பாரம்பரிய முறைப்படி நேற்று இடம்பெற்றது.

பிரதமரின் இந்து சமய விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பாளர் இராமசந்திர குருக்கள் பாபு சர்மா, மயூரா பதி ஸ்ரீ பத்ரகாளி அம்மன்

15

## வடக்கு மீனவர்களின் பாதிப்புகள் புரிகின்றன

### சுப்பிரமணியன் சுவாமி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 14

இந்திய கடற்றொழிலாளர்களின் சட்டவிரோத செயல்பாடுகளால், இலங்கையின் வடபகுதி கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்டு வருகின்ற பாதிப்புகளை தன்னால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது என்று இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் முக்கியஸ்தர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

15



காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கொட்டாட்சி ஆலய விதிகளை புறக்கணித்து பிரசித்தி பெற்ற வல்லிபுரம் ஆழ்வார், தொண்டைமானாறு சந்நிதி ஆலயங்களுக்குள் சப்பாத்துடன் நுழைந்தார். இந்த விவகாரம் பெரும் சர்ச்சையையும் இந்து மக்களிடையே அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. (விரிவான செய்தி பக்கம் 5இல்)

## கொரோனாவுக்கு நேற்று 31 பேர் பலி

கொழும்பு, ஒக். 14

நாட்டில் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி மேலும் 31 பேர் உயிரிழந்தனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் உயிரி

15

## ரஜமகா விகாரையில் கைக்குண்டு மீட்பு

கொழும்பு, ஒக். 14

கொழும்பிலுள்ள விகாரை ஒன்றிலிருந்து கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கொழும்பு-பொரலெஸ்க முவவில் உள்ள

15

## நேற்று 679 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஒக். 14

நாட்டில் மேலும் 679 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்க ளின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 28 ஆயி ரத்து 414 ஆக அதிகரித்துள்ளது.

15

## கோவிட் -19 மாத்திரை இறக்குமதி; விசேட கவனம் செலுத்தும் அரசு

கொழும்பு, ஒக். 14

கொரோனா தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாத்திரையை, இலங்கையிலும் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைள் எடுக்கப்பட்டு வருகின்றவென இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

இது தொடர்பில் தேவையான ஆலோசனைகளை பெற்றுக்கொடுக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய கத்திடம் கோரி

15

## அத்துமீறிய இந்தியர்களுடன் மோதல்; வடமராட்சி மீனவர்கள் மூவர் காயம்!

வடமராட்சி, ஒக். 14

வடமராட்சி கடலில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தது டன், பருத்தித்துறை மீனவர்களின் வலைகளையும் அறுத்த இந்திய மீனவர்களுடன் பருத்தித்துறை மீனவர்கள் நேற்று மோதலில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகின்றது. இந்த சம்பவத்தில் மூன்று மீனவர்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் மீன்பிடிப்பதற்காக பருத்தித்துறை மீனவர்கள் படகுகளில் சென்றிருந்தனர். அந்த சமயம் வடமராட்சி கடற்பரப் பில் அத்துமீறிய மீன்பிடியில்

15



## இப்படியும் நடக்கிறது...!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரா.சம்பந்தன் தலைமையில் கடந்த ஒரு தசாப்தமாக செய்துகொண்டிருக்கின்ற எந்த முயற்சியும் வெற்றிபெறவில்லை என்பது ஒன்றும் ஆய்வுக்குரியதல்ல.

வடக்கு மாகாண சபைக்கு முதல்வராக நீதியரசர் விக்னேஸ்வரனை வலுக்கட்டாயமாக அரசியலுக்கு இழுத்து வந்தனர். அவரைக் கொண்டுவரும்போது அவர் பற்றி அவர்கள் தமிழ் மக்களுக்கு கூறியவையும், கொடுத்த வாக்குறுதியும் பொய்த்துப் போனது.

பின்னர், கொண்டுவந்தவர்களே அவரை விமர்சிக்கும் நிலைமை ஏற்பட்டது.

மஹிந்த ராஜபக்ஷவை ஆட்சியிலிருந்து அகற்றவேண்டும் என்று மைத்திரிபால சிறிசேனவை பொதுவேட்பாளராக்கி அவரை வெல்ல வைக்க தாங்கள்தான் முக்கிய பங்காற்றியதாகக் கூட்டமைப்பு தெரிவித திருந்தது.

அதில் ஓரளவு உண்மை இருந்தாலும், அவரைக் கொண்டுவந்தவர்களே அவரை நாயோடு ஒப்பிட்டு பொதுவெளியில் பேசுமளவிற்கு அவருடன் முரண்பட நேர்ந்தது.

நாம் யாரை அரசியலில் இருந்து வெளியேற்றுவதற்காக மைத்திரியை கொண்டு வந்தோமோ, அவரே அவருடன் சேர்ந்து இன்றுவரை அரசியல் செய்துகொண்டிருக்கிறார்.

அவர் ஆட்சியில் இருந்த ஐந்து வருடங்களும் நாங்கள், ரணிலுக்கு முண்டு கொடுத்தோமே தவிர, தமிழ் மக்களின் எந்த ஒரு நலனையும் கவனத்தில் கொள்ளவில்லை.

இப்போது நாமே நல்லாட்சி அரசாங்கம் தோல்வியில் முடிந்ததை ஏற்றுக்கொள்கின்றோம்.

பின்னர் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில், வடக்கு - கிழக்கின் மிகப்பெரிய சபையான யாழ்ப்பாண மாநகர சபைக்கு பலரின் விருப்பத்திற்கும் மாறாக ஆனல்ட்டைக் கொண்டு வந்தார்கள்.

கொண்டுவந்தவர்களே பின்னர் அவரை பதவியிலிருந்து வெளியேற்றி தமது தெரிவின் ‘திறமையை’ பறைசாற்றினர்.

ஜனாதிபதித் தேர்தலில், நமது புத்திஜீவிகள் ஒன்றுசேர்ந்து தமிழர் தரப்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்று சொன்ன ஆலோசனையைக் கண்டுகொள்ளாமலே, சஜித் பிரேமதாஸவுக்கு வலிந்து சென்று ஆதரவு வழங்கினோம்.

அவர் வெற்றிபெறமுடியவில்லை என்றாலும், அவருக்கே தமிழ் மக்கள் பெருவாரியாக வாக்களித்திருந்தனர்.

ஆனால், இன்று அவர் ஒரு நல்ல எதிர்க்கட்சித் தலைவராகவும் செயல்படவில்லை என்று அவர் மீதும் நம்பிக்கை இழந்திருக்கின்றோம்.

தப்பித்தவறி அவர் அன்று ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றிருந்தாலும் இன்று அவரும் தோல்வியடைந்த ஜனாதிபதியாகத் தான் இருந்திருப்பார் என்பதற்கு - இன்று அவர் மீது வைக்கும் விமர்சனங்களே சாட்சி. ஓர் எதிர்க்கட்சித் தலைவராக நாட்டுக்குத் தலைமையைக் கொடுக்க முடியாத ஒருவரைத் தான், நாம் நாட்டின் ஜனாதிபதியாக்க முயன்றிருக்கின்றோம்.

**- ஊர்க்குருவி**

# காரைநகரில் 11 பேர் உட்பட வடக்கில் நேற்று 27 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஒக். 14

காரைநகர் மருத்துவ அதிகாரி பிரிவில் 11 பேர் உட்பட 19 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று 147 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்படி, காரைநகர் மருத்துவ அதிகாரி பிரிவில் 11 பேர், யாழ். போதான மருத்துவமனையில் 3 பேர், பருத்தித்துறை ஆதார மருத்துவ மனையில் 2 பேர், கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் 2 பேர், நொதேர்ன் சென்றல் தனியார் மருத்துவமனையில் ஒருவர் என 19 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

மன்னார் பொது மருத்துவமனையில் இருவர், மன்னார் கடற்படை முகாமில் இருவர் என மாவட்டத்தில் 4 பேருக்கும், வவுனியா பொது மருத்துவமனையில் ஒருவர், நெடுங்கேணி பிரதேச மருத்துவமனையில் ஒருவர் என மாவட்டத்தில் இருவருக்கும், முல்லைத்தீவு - மல்லாவி ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும், கிளிநொச்சி பொது மருத்துவமனையில் ஒருவருக் கும் தொற்று இனங்காணப்பட்டது. (ஐ)

## தொற்றுக்கு ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஒக். 14

கொரோனா தொற்று கார ணமாக வவுனியா மாவட்டத் தில் நேற்று ஒருவர் உயிரிழந் தார்.

வவுனியா பொது மருத்து வமனையால் அனுப்பப்பட்ட மாதிரிகள் நேற்று யாழ். போதனா மருத்துவமனையில் பி. சி. ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே இறந்தவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

வவுனியாவை சேர்ந்த ஆர். ராக்கம்மா (வயது 79) என்பவரே இவ்வாறு தொற்றால் உயிரிழந்தார். (ஐ)

## யூனியன் கல்லூரியின் நிறுவுநர் நாளும் நினைவு பேருரையும்

யாழ்ப்பாணம், ஒக். 14

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் நிறுவுநர் நாளும் நினைவுப் பேருரையும் நாளை வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணிக்கு (இலங்கை நேரம்) நிகழ்நிலை அரங்காக இடம் பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் தி. வரதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், ‘பெருந்தொற்றுக் காலமும் கல்வி பெறுதலுக் கான சவால்களும்’ என்ற தலைப்பில் நினைவுப் பேருரையை பாடசாலையின் பழைய மாணவரும் ஆசிரியருமான த. ஸ்ரீபிரகாஷ் ஆற்றவுள்ளார். சிறப்புரையை ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் எஸ். சிறிகணேசன் ஆற்றுவார்.

சூம் செயலி வழியில் 340 452 2872 என்ற அடையாள எண்வழியே juc என்ற கடவுச் சொல்லை பயன்படுத்தி நிகழ் வில் இணைய முடியும். அத்துடன், juc media club இன் பேஸ்புக் பக்கத்தில் நேரலையாகவும் பார்வையிட முடியும்.

(ஐ)

கல்வி TV CHANNEL-1

**14.10.2021**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி TV CHANNEL - 2

**14.10.2021**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
14.10.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 28

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# சம்பந்தனின் உடனடி தலையீடு அவசியம்!

மாகாண சபை தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீள் ஒழுங்கமைக்க வேண்டியது காலத்தின் கட்டாய மாகும். இந்தப் பொறுப்பை கூட்டமைப்பின் தலைவர்கள் இனியும் தட்டிக் கழிக்க முடியாது. இலங்கை தமிழ் அரசு கட்சிக்கும், பங்காளிக் கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் அவ்வப்போது பொதுவெளிகளில் பேசப்படும் நிலைமையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. இது ஆரோக்கியமானதல்ல. அண்மையில் சுமந்திரனின் நடவடிக்கைகள் தொடர்பில் பங்காளிக் கட்சிகள் சம்பந்தனிடம் முறையிட்டிருந்தன.

கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளாக இருப்பவர்கள் ஆகக்குறைந்தது, ஓர் அரசியல் கூட்டுக்கான ஒழுக்கத்தை பின்பற்ற வேண்டும். எதிரணியில் இருப்பவர்கள் கூட்டமைப்பை விமர்சிப்பது போன்று, ஒருவரை ஒருவர் பொது வெளிகளில் விமர்சிப்பதானது, வாக்களித்த மக்களை அவமானப்படுத்தும் செயலாகும். இதனை அனைவரும் உணரவேண்டும். இந்தப் பிரச்னைகள் எப்போதுமே, முதலில் இலங்கை தமிழ் அரசு கட்சியிலிருந்துதான் ஆரம்பிக் கின்றது. ஒருவரை தரக்குறைவாக பேசுகின்றபோது, மற்றவர்களும் தங்க ளின் நியாயத்தை கூறவே முற்படுவர். இந்தப் பிரச்னைகளை தவிர்க்க வேண்டுமாயின் கட்சியின் தலைமை இறுக்கமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் - அதாவது சம்பந்தன்.

பொதுவாக தமிழ் சூழலில் தங்களின் எதிராளிகளை விமர்சிக்கின்றபோது, நாகரிகமான சொற்கள் பயன்படுத்தப்படுவதில்லை. ஒட்டுக்குழு, மண்டையன் குழு, காட்டிக் கொடுத்தவர்கள், துரோகி - இப்படியான சொற்களே அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. இந்த விடயத்தில் தமிழ்த் தேசியம் பேசும் எந்தக் கட்சியும் விதிவிலக்கல்ல. அடிப்படையில் இந்த சொற்கள் எவையுமே அரசியலில் பெறுமதியான சொற்களல்ல. துரோகி, தியாகி, காட்டிக்கொடுப்பு - இவைகள் வரலாற்றால் தீர்மானிக்கப்படுபவையே தவிர, ஒரு கட்சியோ அல்லது சில நபர்களோ இதனைத் தீர்மானிக்க முடியாது.

ஒரு காலத்தில் இந்தியாவை சாத்தானின் படைகள் என்று வர்ணித்ததையும் நாம் கண்டிருக்கின்றோம். ஆனால், இன்று அதே இந்தியாவின் தயவை எப்படியாவது பெற்றுவிட வேண்டுமென்பதே அனைவரின் தேவையாக இருக்கின்றது. இதனை எப்படி அரசியல் ரீதியில் நிறுவ முடியும்? ஓர் அரசியல் கட்சியை அவர்களின் அரசியல் நிலைப்பாட்டிலுள்ள குறைபாடுகளை முன் வைத்து விமர்சிப்பதே முதிர்ச்சியான அரசியல் அணுகுமுறையாகும். ஆனால், இந்த அரசியல் கலாசாரம், நமது தமிழ் சூழலில் மிகவும் பலவீனமாகவே இருக்கின்றது.

முடிந்தவரைக்கும் அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டிய காலம் இது. தமிழ்மக்களின் - குறுகிய கால மற்றும் நீண்ட கால நலன்களை வெற்றி கொள்வதற்கு, ஒன்றுபட்ட செயல்பாடுகளே இன்றைய தேவை. இதனை ஈழநாடு தொடர்ச்சியாக வலியுறுத்திவந்திருக்கின்றது. இப்போது மீண்டும் வலியுறுத்துகின்றது. தொடர்ந்தும் வலியுறுத்தும் - பொது வெளிகளில் முரண்படுவதை கைவிடுங்கள் - ஒன்றுபடுங்கள்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு கட்சியும் தங்களது பாராளு மன்ற உறுப்பினர்களை கட்டுப்படுத்த வேண்டும். கட்சிகளின் தலைவர்கள் தொடர்பில், தலைவர்கள் மட்டுமே பேசவேண்டும். அவ்வாறானதோர் அரசியல் ஒழுக்கம் பின்பற்றப்படுமாயின் பல பிரச்னைகளை இலகுவாக தீர்த்துக்கொள்ள முடியும். கூட்டமைப்பின் மூன்று கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராசா, சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர், கட்சிகள் மத்தியில் காணப்படும் பிரச்னைகளை முத்தரப்பு கலந்துரையடலாக மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் தேவையற்ற முரண்பாடுகளை தவிர்த்துக்கொள்ள முடியும். இலங்கை தமிழ் அரசு கட்சி, அதன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கண்டிப்பான உத்தரவை பிறப்பிக்க வேண்டும்.

இந்த விடயத்தில் கூட்டமைப்பின் தலைவராக இருக்கும் இரா. சம்பந்த னுக்கே தலையாய பங்குண்டு. சம்பந்தன் தொடர்ந்தும் பொதுவாகப் பேசு வதை நிறுத்தவேண்டும். ஓர் உயர் குழுவை நியமித்து, அந்தக் குழுவிற்கே முழு உரிமையையும் வழங்க வேண்டும். ஆனால், இதுவரையில் சம்பந்தன் எந்தவொரு முன்னேற்றகரமான நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. இதன் காரணமாகவே கூட்டமைப்பு தொடர்ந்தும் உள்ளுக்குள் சிதைந்து கொண்டிருக்கின்றது. இது கூட்டமைப்பின் சிதைவாக மட்டும் இருந்தால், நாம் இது தொடர்பில் தலையீடு செய்ய வேண்டிய தேவையில்லை. ஆனால், இது தமிழ் மக்களின் பேரம் பேசும் அரசியல் பலத்தை சிதைக்கின்றது. இந்த அடிப் படையில், இந்த விடயத்தில் தலையீடு செய்கின்ற உரிமை தமிழர் தாயகத்தில் வாழும் ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு.

# மரணித்திருப்பவை மாகாண சபைகள் மாத்திரமல்ல!



- அலசுவது இராஜதந்திரி -

இலங்கையில் புதிய அரசியலமைப் பொன்று தேவை. ஆனால், அந்த அரசியலமைப்பில் “மரணித்துள்ள மாகாண சபைகளுக்கு புத்துயிரளிக்க வேண்டாம் என்று பேராசிரியர் இந்துராகாரே தர்மரத்ன தேரர் என்ற பௌத்த பிக்கு அரச தரப்பின ருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் அடுத்த ஆண்டில் பெரும்பாலும் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப் படலாம் என்று தெரிவித்திருந்தார். இதனை யடுத்தே பிக்கு இந்துராகாரே தர்மரத்ன தேரர் மாகாண சபைகள் குறித்த தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இந்தப் பிக்கு மாத்திரமல்ல, 1987ஆம் ஆண்டு மாகாண சபை முறைமை இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன வால் கொண்டுவரப்பட்டபோது பௌத்த பிக்குமார் கொழும்பில் வீதிகளில் இறங்கியும் மாகாண சபை முறைமைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

அத்துடன், இந்திய - இலங்கை ஒப்பந்தத் தில் கைச்சாத்திட வந்திருந்த அன்றைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியையும் அணி வகுத்து நின்ற ஒரு கடற்படை சிப்பாய் தனது ரைபிள் துப்பாக்கியின் அடிப்பாகத்தினால் தாக்கியிருந்தார்.

மாகாணசபை முறைமைக்கு தென்னிலங் கையில் மாத்திரமல்ல. வடக்கு - கிழக்கிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பினரால் பலத்த எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது.

வடக்கு-கிழக்கில் அதிகாரப் பரவலாக் கத்துடன் கூடிய நிர்வாக முறைமையை ஏற்படுத்தும் விதத்திலேயே மாகாண சபை ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், நாடளவில் தென்னிலங்கையில் உள்ள ஏனைய மாகாணங்களும் அதிகாரப் பரவலாக்கத்தை வேண்டி நிற்கலாம் என்ற காரணத்தினாலேயே இன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, மாகாண சபை நிர்வாக முறைமையை நாடளாவிய ரீதியில் விஸ்தரித்திருந்தார்.

ஆனால், பேராசிரியர் இந்துராகாரே தர்மரத்ன தேரோ குறிப்பிட்டது போல மாகாண சபை முறைமை தோல்விகண்டுள்ள தென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியதாகவே இருக்கின்றது. மாகாணசபை முறைமையின் தோல்வி முதலில் வடக்கு-கிழக்கிலிருந்தே ஆரம்பமாகியிருந்தது. நாளடைவில் ஏனைய மாகாணங்களில் நிர்வாகத் திறமையின்மை யால் மாகாண சபை முறைமை தோல்வி கண்டிருந்ததென்பதே உண்மையாகும்.

மாகாண சபை முறைமை அறிமுகப்படுத் தப்பட்டு நாளடைவில் வெற்றிகரமாக இயங்கும்பட்சத்தில் மேலும் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்வதென்பதே அரசிய லமைப்பின் பிரகாரமான ஏற்பாடாக இருந் தது. ஆனால், தற்போது மாகாண சபை களுக்கு ஒதுக்கப்படும் பெருமளவிலான நிதி என்பதுகூட “விழலுக்கு இறைத்த நீர் போலவே இருக்கின்றது“. இதனையே, தென் னிலங்கையர்கள் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இலங்கை ஒரு சிறு நாடாகும். இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற விசாலமான நாடுகளில் அதிகாரப் பரவலாக்கத்துடன் கூடிய மாநில சுயாட்சி முறை வெற்றிகரமாக இயங்கி வருகின்றது. சகல அதிகாரங்களும் மத்தியில் குவிந்திருக்கும் காரணத்தினால் பல்லினங்களையும் பலதரப்பட்ட கலாசார வேறுபாடுகளையும் கொண்ட நாடுகளில் மாநில வாரியாகவும் பிரதேச வாரியாகவும் அதிகாரப் பரவலாக்கங்கள் மேற்கொள்ளப் படுகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலாக்கல் கோரிக்கையே இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் தமிழ் அரசியல் கட்சிகளால் கோரப்பட்டு வருகின்றன. தமிழ் அரசுக் கட்சியின் கோரிக்கைகூட சமஷ்டி அடிப்படையிலான தாகவே இருந்து வந்தது. வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வின் அவசியத்தை சுதந்திரம் பெறுவதற்கு முற்பட்ட காலத்திலேயே சிங்கள அரசியல்வாதிகள் ஏற்றுக்கொண்டிருந் தனர். ஆனால், தமிழ் அரசியல் தரப்பு அன்று தேசிய அரசியலில் மேம்பட்டிருந்த நிலையில் தாம் ஓரங்கட்டப்படலாமென்ற காரணத்தால் ஒரு சமஷ்டி முறையிலான ஏற்பாட்டை ஏற்பதற்கு தயங்கியும் இருந்தனர்.

ஆனால், நாளடைவில் சமஷ்டி அமைப் பின் முக்கியத்துவம் பெரிதும் உணரப்பட்ட நிலையில் அதனை தென்னிலங்கை அரசியல் வாதிகள் பிரிவினைக்கு ஒப்பானதாக நோக்கியதன் விளைவாக பிரிவினைவாத அரசியலும் தமிழ் அரசியல் தரப்பில் படிப்படியாக வலுவடைந்திருந்தது.

எது எப்படியிருந்தபோதிலும் பேராசிரியர் இந்துராகாரே தர்மரத்ன தேரர் குறிப்பிட்டது போல மாகாண சபை நிர்வாக முறை மரணித் திருக்கின்றதென்பதை தவறாகக் கொள்ள முடியாது.

மறுபுறத்தே நாட்டின் ஆட்சியதிகார நிலவரங்களை நோக்கும் பட்சத்தில் ‘பசுத் தோல் போர்த்த புலி’ போல ஜனநாயகம் என்ற போர்வையில் சர்வாதிகாரப்போக்கே வலுவடைந்து நாட்டின் அரசியல், பொரு ளாதார நிலவரங்களும் மோசமான கட் டத்தை அடைந்துள்ளன.

எனவே, மரணித்திருப்பது மாகாணசபை முறைமை மட்டுமல்ல. நாட்டில் ஜனநாயக அரசியலும் மரணித்துள்ளதென்பதை பேராசிரியர் இந்துராகாரே தர்மரத்ன தேரர் அறிந்திருப்பார் என்றே கருத முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஒக்ரோபர் - 14 வியாழக்கிழமை
பிலவ வருடம் - புரட்டாதி 28
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 1.30 - 3.00
திதி : நவமி



## இன்றைய ராசிபலன்

14.10.2021

**மேடம்**
வேண்டிய ஒருவரின் உதவியுடன் சிக்கல்கள் அகலும்.குழந்தைகளின் பொருளாதார நிலை முன்பைவிட சிறக்கும்.பணியாளர்கள் அதிகம் உழைத்து நல்ல பலன் அடைவீர்கள்.

**இடபம்**
விருப்பங்கள் நிறைவேறும். செலவு குறையும். உங்களது செயலே உங்களுக்கு சிரமம் ஏற்படாமல் கவனமாயிருங்கள். தீவிரமாக உழைக்க வேண்டி வரும். பேச்சில் கவனம் தேவை.

**மிதுனம்**
ஆடம்பரச் செலவுகள் குறைந்து சேமிப்பு அதிகரிக்கும். நண்பர்களின் உதவியால் வாழ்க்கைத் துணைக்கு நன்மை நடைபெறும். இழந்திருந்த மனஅமைதி உற்றார் உறவினர்களால் மீளும்.

**கடகம்**
வாழ்க்கைத்துணையின் ஆரோக்கியம் நிம்மதி தரும். சகபணியாளர்களை அனுசரித்து சென்று நன்மை அடைவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்**
சிலருக்கு எதிர்பார்த்திராத நல்ல விஷயம் ஒன்று நிகழும். சுவையான உணவு உண்ணும் நாள். பழைய நட்பை சந்திப்பீர்கள். முன்பு இருந்த பகையை நீங்களே முன்வந்து தீர்ப்பீர்கள்.

**கன்னி**
பிறருக்கு அழகான அன்பளிப்பை கொடுத்து மகிழ்வீர்கள். கசப்புணர்வை வளர்க்க வேண்டாம். திடீர் சந்திப்பு ஒன்று மகிழ்ச்சி தரும். தந்தையின் ஆரோக்கியத்தில் இருந்த பாதிப்புகள் தீரும்.

**துலாம்**
தொழிலில் நீங்கள் எடுத்த முயற்சிக்கு உதவிகள் கிடைக்கும். செலவுகளைச் சமாளிக்க கடன்கள் வாங்க வேண்டாம். எதிர்பாலினத்தின் ஒருவருக்கு உங்கள் மீது மதிப்பு வரும்.

**விருட்சிகம்**
சுப நிகழ்ச்சியில் நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். தான, தர்மங்கள் செய்யும் எண்ணம் வரும். மகிழ்ச்சி. பல இடங்களுக்கு அலைந்தாலும் வெற்றியால் மகிழ்ச்சி உண்டு. கவலை தீரும்.

**தனுசு**
உறவினரிடம் இருந்து நல்ல செய்தி வரும். வெளிநாட்டு முயற்சிகளில் சிறிதளவு முன்னேற்றம் உண்டு. கோபத்தைக் கட்டுப் படுத்துவீர்கள். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு.

**மகரம்**
விமர்சனங்களுக்கு பதில் சொல்ல வேண்டாம். பொழுதுபோக்கு அம்சங்களில் கவனம் செல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதம் செய்ய வேண்டாம்.

**கும்பம்**
பணியில் தவறு ஏற்படாமல் கவனமாக இருங்கள். பொறுமையை கடைபிடிக்க வேண்டிய நாள். சேமிப்பில் ஆர்வம் கூடும். நல்ல விஷயம் ஒன்றை மற்றவருக்கு கற்றுக் கொடுப்பீர்கள்.

**மீனம்**
கவனக்குறைவால் தவறு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். புதிய வாகனம் வாங்க இன்று முன் பணம் கொடுப்பீர்கள். நண்பர்களால் நன்மையும், லாபமும் உண்டு. யோகமான நாள்.

# ஐந்து மாத தி.மு.க. ஆட்சிக்கு கிடைத்த நற்சான்றுதான் உள்ளூராட்சி முடிவு!

## தேர்தல் வெற்றி குறித்து ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, ஒக். 14

மக்கள் மத்தியில் ஐந்தாண்டில் கிடைக்க வேண்டிய நம்பிக்கை 5 மாதத்தில் கிடைத்து விட்டது என்று உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் குறித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

9 மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சித் தேர்தல் முடிவு வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில், முதல்வர் ஸ்டாலின் மக்களுக்கு நன்றி தெரிவித்து வெளியிட்ட அறிக்கையில், “ஒன்பது மாவட்டங்களில் நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.கவும் அதன் கூட்டணிக் கட்சிகளும் மகத்தான மாபெரும் வெற்றியைப் பெற்று வரும் செய்தி, கடந்த ஐந்து மாத



திமுக ஆட்சிக்குக் கிடைத்த நற்சான்று.

தி.மு.க. ஆட்சிக்கு வந்த போது ஒருபக்கம் மருத்துவ நெருக்கடி - இன்னொரு பக்கம் பொருளாதார நெருக்கடி. இரண்டும் சூழ்ந்த இக்கட்டான காலகட்டத்தில் திமுக அரசு அமைந்தது. எனினும் அனைத்துத் தரப்பினரின் தேவைகளையும் அறிந்து நிறைவேற்றிக் கொடுத்தோம்.

தேர்தலுக்கு முன்பு இருந்த செல்வாக்கை விட, இந்த ஐந்து மாத காலத்தில் செல்வாக்கு அதிகமாகி இருக்கிறது என்பதை நான் சொல்லி வந்தேன். இது ஏதோ எனது அனுமானம் அல்ல, நூற்றுக்கு நூறு உண்மைதான் என்பதை ஊரக உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் நாட்டுக்குக் காட்டி இருக்கிறது.

எத்தகைய நல்ல திட்டங்களை கோட்டையில் இருந்து உத்தரவிட்டாலும் அதனைக் குக்கிராமத்தில் வாழும் மக்களின் வாசலில் நிறுத்த வேண்டியது உள்ளாட்சி அமைப்புகளே; அதன் பிரதிநிதிகளான நீங்கள்தான். அதனை நெஞ்சில் வைத்து நீங்கள் அனைவரும் மக்களுக்காக உழைக்க வேண்டும். வெற்றிக் கொண்டாட்டங்கள் யாருக்கும் இடையூறு ஏற்படுத்தா வகையில் அமையட்டும்” என்று கூறியுள்ளார்.

# மாவோ தீவிரவாதிகள் பயிற்சி தொடர்பில் தமிழகம் முழுவதிலும் அதிரடி சோதனை!

சென்னை, ஒக். 14

மாவோ தீவிரவாதிகளின் பயிற்சி தொடர்பாக சென்னை உள்பட தமிழகம் முழுவதும் பல இடங்களில் என்.ஐ.ஏ. பொலிஸார் நேற்றைய தினம் அதிரடி சோதனைகளை நடத்தினார்கள்.

மாவோ தீவிரவாதிகளின் செயற்பாடுகள் ஓரளவு தமிழகத்தில் கட்டுப்படுத்தப்பட்ட போதிலும், கேரளாவில் அவர்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. கேரளாவில் நீலாம்பூர் காட்டுப்பகுதியில் மாவோ பயங்கரவாதிகள் பயிற்சி எடுத்ததாக தகவல் வெளியானது. அதுபற்றி கேரள பொலிஸார் தீவிர விசாரணை மற்றும் தேடுதல் வேட்டையிலும் ஈடுபட்டார்கள். இந்த வழக்கு என்.ஐ.ஏ. எனப்படும் தேசிய புலனாய்வு பிரிவிற்கு மாற்றப்பட்டது. என்.ஐ.ஏ. பொலிஸார் இந்த வழக்கு தொடர்பாக 6 பேரை கைது செய்துள்ளனர்.

அந்த வழக்கில் சிக்கியவர்கள் மற்றும் அவர்களோடு தொடர்புடையவர்கள் என்று சந்தேகப்படும் நபர்களை என்.ஐ.ஏ. பொலிஸார் தொடர்ந்து கண்காணித்து வந்தனர். அதன் தொடர்ச் சியாக நேற்று என்.ஐ.ஏ. பொலி ஸார் அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சென்னையில் அம்பத்தூர், வில்லிவாக்கம் மற்றும் செங்குன்றம் ஆகிய 3 இடங்களில் சோதனை நடந்ததாக தகவல் வெளியானது. இது போல கோவையில் 3 இடங்கள், கிருஷ்ணகிரி, தேனி, புதுக்கோட்டை, கன்னியாகுமரி, சேலம் ஆகிய இடங்களிலும் சோதனை நடத்தப்பட்டதாக தெரியவந்துள்ளது.

கர்நாடக மாநிலம் பெங்களூருவில் 5 இடங்கள், கேரளாவில் 3 இடங்களிலும் சோதனை வேட்டை நடந்ததாக கூறப்படுகிறது. இந்த சோதனை பற்றி என்.ஐ.ஏ. தரப்பில் இதுவரை எந்த விவரங்களும் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை. ஆனால், சோதனை நடப்பதை மட்டும் உறுதிபடுத்தி உள்ளனர்.

# பிரபல நடிகர் ஸ்ரீகாந்த் காலமானார்

சென்னை, ஒக். 14

தமிழகத்தின் மூத்த நடிகர் ஸ்ரீகாந்த் (82) வயது மூப்பு காரணமாக சென்னையில் நேற்று முன்தினம் மாலை காலமானார் 200இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ள, இவர் 50 படங்களில் கதாநாயகனாகவும் நடித்துள் ளார்.

நடிகர் ஸ்ரீகாந்த் சினிமாவிற்கு வருவதற்கு முன் அமெரிக்க தூதரகத்தில் பணிபுரிந்து வந்தார். அப்போதிருந்தே மேடை நாடகங்களிலும் நடித்து வருவதை வழக்கமாக கொண்டிருந்த ஸ்ரீகாந்துக்கு 1964-ஆம் ஆண்டு இயக்குநர் ஸ்ரீதர் தயாரித்து, இயக்கிய “வெண்ணிற ஆடை” படத்தில் கதாநாயகனாக நடிக்கும் வாய்ப்பு கிடைத்து திரைத்துறைக்கு அறிமுகமானார்.

முதல் படத்திலேயே கதாநாயகனாக நடிக்கும் வாய்ப்பு கிடைத்து, அவர் ஏற்று நடித்த டாக்டர் சந்துரு என்ற கதாபாத்திரத்திற்குக் கௌரவம் சேர்த்திருப்பார்.

இந்தப் படம் இவருக்கு மட்டுமின்றி மறைந்த முதல்வர்



ஜெயலலிதா, நடிகை வெண்ணிற ஆடை நிர்மலா மற்றும் நடிகர் வெண்ணிற ஆடை மூர்த்தி ஆகியோருக்கும் முதல் படமாகும்.

மேஜர் சந்திரகாந்த் என்ற நாடகத்தில் ஸ்ரீகாந்த் என்ற கதாபாத்திரத்தில் நடித்து நாடகத் துறையில் இவர் பிரபலமாக இருந்ததால் தனது சொந்தப் பெயரான வெங்கட்ராமன் என்ற பெயரை பயன்படுத்தாமல் ஸ்ரீகாந்த் என்ற பெயரிலேயே சினிமாவிலும் நடிக்கலானார்.

தன்னால் எந்த கதாபாத்திரமும் ஏற்று நடித்து, அதற்கு பெருமை சேர்க்க முடியும் என்று நிரூபித்தவர் ஸ்ரீகாந்த். குறிப்பாக எதிர் நீச்சல், பூவா தலையா, பாமா விஜயம், மற்றும் காசேதான் கடவுளடா போன்ற படங்களை இவருடைய நகைச்சுவை நடிப்பிற்கு சான்றாகக் கூறலாம்.

அதன்பின் தொடர்ச்சியாகப் பல படங்களில் வில்லன் கதாபாத்திரம் ஏற்று நடித்து வந்த நடிகர் ஸ்ரீகாந்துக்கு நடிகர் திலகம் சிவாஜி கணேசனோடு இணைந்து நடித்த தங்கப்பதக்கம் திரைப்படம் இவருடைய திரைப்பயணத்தில் ஒரு மைல் கல் எனலாம்.

எழுத்தாளர் ஜெயகாந்தனின் நாவல்களான, ‘சில நேரங்களில் சில மனிதர்கள்’, ‘ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்’, ‘கருணை உள்ளம்’ போன்ற படங்களில் நடிகர் ஸ்ரீகாந்த முக்கிய வேடமேற்று நடித்திருப்பது பெருமைக்குரிய ஒன்று.

இயக்குநர் ஸ்ரீதர் தொடங்கி கே.பாலசந்தர், ஏ.பீம்சிங், ஏ.சி. திருலோகசந்தர், முக்தா ஸ்ரீநிவாசன், பி.மாதவன், கிருஷ்ணன் பஞ்சு மற்றும் எம்.ஏ.திருமுகம் என அனைத்து பெரும் இயக்குநர்களுடனும் பணியாற்றிய சிறப்பு பெற்றவர்.

# எரிபொருள் விலையிலும் நிச்சயம் மாற்றம் வரும்!

## உறுதிப்படுத்தினார் பந்துல

கொழும்பு, ஒக். 14

**“எரிபொருள் விலையில் நிச்சயம் மாற்றம்வரும். தற்போதைய சூழ்நிலையில் அது தவிர்க்கமுடியாததொன்று. எனவே, எந்த காலப் பகுதியில், எப்படியான மாற்றம் இடம்பெறும் என்பது குறித்து நிதி அமைச்சரும், துறைசார் அமைச்சரும் கலந்துரையாடி தீர்மான மொன்றை எடுப்பார்கள்.” - என்று வர்த்தகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படாத பொருள்களை உலக சந்தையில் நிலவும் விலைக்கேற்பவே கொள்வனவு செய்யவேண்டிவரும். அந்த வகையில் உலக சந்தையில் சமையல் எரிவாயு, எரிபொருள், பருப்பு உட்பட பல பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

இதற்கு புறம்பாக கப்பல் கட்டணம் உள்ளிட்ட சேவைகளின் விலைகளும் அதிகரித்துள்ளன.

உலக சந்தையில் அதிக விலைக்கு கொள்வனவு செய்து, இங்கு குறைந்த விலைக்கு விற்பனை செய்யமுடியாது. அவ்வாறு எரிபொருளை வழங்கு



வதால் ஒக்ரோபர் மாதத்தில் மாத்திரம் ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என வலுசக்தி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து இவ்வாறு நட்டத்தில் இயங்கினால் பெற்றோலியக் கூட்டுப்பாதனம் ஸ்தம்பித்துவிடும். எனவே, எரிபொருள் விலை மாற்றம் என்பது தவிர்க்கமுடியாததொன்று. அது எப்போது, எவ்வாறு இடம்பெறும் என்பது பற்றி துறைசார் அமைச்சரும், நிதி அமைச்சரும் கலந்துரையாடி முடிவொன்றை எடுப்பார்கள்.

இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளில் இலங்கையைவிடவும் அதிக விலைக்கே அத்தியாவசியப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. பெருந்தொற்றின் பின்னர் உலகில் இவ்வாறான நெருக்கடி ஏற்படுவது வழமை. ஆனால், 2020 மற்றும் 2021 காலப்பகுதியிலேயே பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பலர் தொழில் இழந்துள்ளனர். வறுமை மட்டம் அதிகரித்துள்ளது-என்றார்.

## மண்ணெண்ணெய் அடுப்புக்கு நாடெங்கும் கேள்வி அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 14

இலங்கையில் சமையல் எரிவாயுவின் விலை 85 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், மாற்று தேர்வுகளை நோக்கி மக்கள் நகர்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதன்படி கொழும்பு, கண்டி உட்பட இலங்கையின் பிரதான நகரங்களில் மண்ணெண்ணெய் அடுப்புக்கான கேள்வி அதிகரித்துள்ளது. கடந்த ஓரிரு நாள்களில் மாத்திரம் அதிகளவான அடுப்புகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்று வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

மண்ணெண்ணெய் கொள்வனவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், விறகு வியாபாரிகளின் வர்த்தகமும் களைகட்டியுள்ளது. அதேவேளை, மண் பாண்டங்களை வாங்குவதிலும் மக்கள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

## எரிபொருள் விலையை அதிகரிக்க நேரிடலாம்

### எரிசக்தி அமைச்சரும் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 14

நிதியமைச்சிடமிருந்து எரிபொருள் விலைச்சலுகை கிடைக்காவிட்டால் எரிபொருளின் விலையை அதிகரிக்க நேரிடும் என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன் பில தெரிவித்துள்ளார்.



ஒரு லீற்றர் பெற்றோலை 15 ரூபாயினாலும் ஒரு லீற்றர் டீசலின் விலையை 25 ரூபாயினாலும் அதிகரிப்பதற்கு ஐ.ஓ.சி நிறுவனம் அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருப்பதாக கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இதேபோல எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அந்தக் கோரிக்கைகள் தொடர்பில் பரிசீலித்துவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## நடேசனிடம் மீண்டும் விசாரணை

கொழும்பு, ஒக். 14

பண்டோரா ஆவண சர்ச்சை குறித்து தொழிலதிபர் திருக்குமார் நடேசன் மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, நாளை வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வரும்படி இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அவரை அழைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அன்றைய தினம் நடேசனின் மனைவியான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிருபமா ராஜபக்‌ஷவை விசாரணைக்கு அழைப்பது பற்றி முடிவு எடுக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை, தொழிலதிபர் நடேசன் கடந்த வாரத்திலும் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் ஏற்பட்ட விபத்தால் ஓமந்தை பகுதிக்கு மின்சார தடை

வவுனியா, ஒக். 14



வவுனியாவில் ஏ-9 வீதியில் மாணிக்கவளவு சந்திப்பகுதியில் இடம்பெற்ற விபத்தால் ஓமந்தைப் பகுதிக்கான மின்சாரம் தடைப்பட்டது.

நேற்று அதிகாலை 3 மணியளவில் யாழ்ப்பாணம் நோக்கி வந்த ஹன்ரர் ரக வாகனம் மின் கம்ப மொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது சாரதிக்கு சிறு காயம் ஏற்பட்டதுடன் வாகனம் சேதமடைந்தது. இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இந்த விபத்தினால் மின்கம்பம் உடைந்து வீழ்ந்ததால் ஓமந்தைப் பகுதியின் சில கிராமங்களுக்கான மின்சாரம் தடைப்பட்டது.



## சக்கோட்டை பகுதியில் 35 கிலோ கஞ்சா மீட்பு!

வடமராட்சி, ஒக். 14

பருத்தித்துறை - சக்கோட்டைப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட 35 கிலோ கேரள கஞ்சா மீட்கப்பட்டதுடன் மீன்பிடிப் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இராணுவத்தினரால் இந்த கேரளக் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை அங்கு இராணுவத்தினர் சென்றபோது 35 கிலோ கேரளக் கஞ்சா பொதிகள் மற்றும் மீன்பிடிப் படகு என்பன காணப்பட்டன. அவற்றை இராணுவத்தினர் கைப்பற்றினர். இவ்வாறு மீட்கபட்ட கஞ்சாப் பொதிகள் மற்றும் மீன்பிடிப் படகு என்பன பருத்தித்துறை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (அ-2)

## பட்ஜெட்டில் முழு வருடத்துக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படாது

கொழும்பு, ஒக். 14

நாட்டில் எந்தவிதத்திலும் பஞ்சம் ஏற்பட இடமளிக்க போவதில்லையென நிதி அமைச்சர் பசில் ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் உணவு பாதுகாப்பு தொடர்பில் விவசாய அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய அமைச்சுக்களின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அடுத்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தில்



முழு வருடத்துக்கும் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படமாட்டாது என அவர் கூறினார்.

அந்தந்த செயற்திட்டங்களுக்காகக் கட்டம் கட்டமாக நிதி ஒதுக்கீடு செய்யத் தீர்மானித்துள்ளதாக நிதி அமைச்சர் தெரிவித்தார்.

## 202 கோடி ரூபா வருவாய் ஈட்டிய புவி சரிதவியல் சுரங்க பணியகம்

கொழும்பு, ஒக். 14

2021 ஆம் ஆண்டுக்கான புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் வருவாய் ஒகஸ்ட் மாத இறுதியில், கடந்த ஆண்டை விட 74 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

ஒகஸ்ட் நிலவரப்படி 202 கோடி ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளதாக பணியகம் தெரிவித்துள்ளது. சுரங்கத்துக்கான அனுமதிகள், மணல், சரளை மற்றும் மண் கொண்டு செல்வதற்கான உரிமங்கள் மற்றும் கனிம வளங்களை ஏற்றுமதி செய்வதற்கான உரிமங்கள் வழங்குவதன் மூலம் வருவாய் ஈட்டப்பட்டது.

புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் இந்த ஆண்டு மணல், சரளை மற்றும் மண் போக்குவரத்துக்கு 777,000 உரிமங்களை வழங்கியுள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு இறுதிக்குள் வழங்கப்படும் போக்குவரத்து உரிமங்களின் எண்ணிக்கை ஒரு மில்லியனைத் தாண்டும்.

மேலும், பணியகம் 12 ஆய்வு அனுமதிகள், 1,856 தொழில் துறை அனுமதிகள், 281 வர்த்தக அனுமதிகள் மற்றும் 374 ஏற்றுமதி அனுமதிகளை வழங்கியுள்ளது.

# தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்

## ஆசிரியர் தொழில் சங்கங்கள் முடிவு

கொழும்பு, ஒக். 14

**உறுதியான தீர்வு கிடைக்கும்வரை போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கக் கூட்டமைப்பு நேற்று தீர்மானித்துள்ளது.**

அதிபர் - ஆசிரியர் சம்பள முரண்பாடு தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் நேற்று முன்தினம் முக்கியத்துவமிக்க கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

எனினும், இதன்போது இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை. அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை தொடர்பில் கலந்துரையாடிவிட்டு முடிவை அறிவிப்பதாக தொழிற்சங்கங்கள் அறிவித்தன.

இதன்பிரகாரம் அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க உறுப்பினர்கள் நேற்று கொழும்பில்கூடி ஆராய்ந்தனர். இந்தக்கூட்டத்திலேயே போராட்டத்தை தொடர்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிரதமருடனான கலந்துரையாடலின் போது எழுப்பப்பட்ட பிரச்னைகள் குறித்து சமூக ஊட ங்களில் தவறான பரிப்புரை பரப்பப்படுவதாக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பொதுச்செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார். நேற்று காலை சமூக ஊட கங்களில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இணையவழி ஊடான கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து தொடர்ந்தும் விலகியிருக்க ஆசிரியர்கள் தொழிற்சங்கம் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# ஆசிரியர்களின் போராட்டம் தோற்கடிக்கப்படவேண்டும்

## எஸ். பி. திஸநாயக்க கருத்து



கொழும்பு, ஒக். 14

"அதிபர், ஆசிரியர்களின் போராட்டத்தை தோற்கடித்து, பாடசாலைகளை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்" என்று ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கலந்துரையாடல்கள் மூலம் பிரச்னைகளுக்கு தீர்வு காணவே ஜனாதிபதியும், பிரதமரும் முற்படுகின்றனர். எனவே, ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு வரவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அவர்களின் போராட்டத்தை ஒடுக்க வேண்டும் எனவும் எஸ்.பி. திஸாநாயக்க குறிப்பிட்டார். (அ)

# 'அரசாங்கம் பெயில்'

## கூறுகிறார் குமார வெல்கம



கொழும்பு, ஒக். 14

"அரசாங்கம் 'பெயில்' என்பதை மக்களும் ஏற்றுக் கொண்டுவிட்டனர். எனவே, மாகாண சபைத் தேர்தலொன்று நடைபெற்றால் அரசாங்கத்துக்கு தக்க பதிலடி காத்திருக்கின்றது." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

நுவரெலியாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

சீனா, இந்தியா மற்றும் அமெரிக்காவின் அழுத்தங்களால் நாட்டுக்கு எதிர்காலத்தில் பாரிய பிரச்னைகள் வரக்கூடும். முறையற்ற அரச முகாமைத்துவம் காரணமாகவே இந்நிலைமை ஏற்படும்.

நாட்டின் நிர்வாகம் இன்று ஸ்தம்பிதமடைந்துள்ளது. இந்நிலைமையை நான் அன்றே சுட்டிக்காட்டினேன். பிரதேச சபையில்கூட அங்கம் வகிக்காத ஒருவரின் நாட்டை ஒப்படைக்க வேண்டாம் என வலியுறுத்தியே கட்சியில் இருந்து வெளியேறினேன்.

மாகாண சபைத் தேர்தல் தற்போது அவசியமில்லை. அரசாங்கம் அதனை நடத்தினால் தேர்தலில் போட்டியிடவேண்டிய நிலை எதிர்க்கட்சிகளுக்கு ஏற் படும். அவ்வாறு நடத்தினால் அரசாங்கத்துக்கு வீட்டுக்கு செல்லவேண்டிய நிலைதான் ஏற்படும்.

பொருள்களின் விலை உயர்வு உட்பட எல்லா துறைகளிலும் பிரச்னை. இந்த அரசாங்கத்தால் முடியாது என்பதை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆக அரசாங்கம் 'பெயில்' என்பது உறுதியாகியுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை எமது நாட்டுக்கு தேவையில்லை - என்றார்.

# மன்னார் அரிப்பு பகுதியில் திடீரென தீப்பற்றி எரிந்தது 'பட்டா' ரக வாகனம்

மன்னார், ஒக். 14

மன்னாரில் வர்த்தக நிலையங்களுக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை பொருள்களை விநியோகித்துவிட்டு மீண்டும் வவுனியா நோக்கிப் பயணித்த 'பட்டா' ரக வாகனம் அரிப்புப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு திடீரென தீப்பற்றியது.

இதன் காரணமாக குறித்த பட்டா ரக வாகனம் முழுமையாக எரிந்துள்ளதோடு, பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்களும் எரிந்து நாசமாகியுள்ளன.

எனினும், அந்த வாகனத்தில் பயணித்த இருவர் எவ்வித காயங்களும் இன்றித் தப்பியுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை சிலாபத்துறைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# முகமாலையில் சட்டவிரோத மணல் அகழ்வு

கிளிநொச்சி, ஒக். 14

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் சட்டவிரோதமாக மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

அண்மைய நாள்களாக முகமாலை வடக்குப் பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. வாய்க்கால்களில் மண் ஏற்றப்பட்டுள்ளதுடன் துரிசும் உடைத்தெறியப்பட்டுள்ளது.

இதனால் வெள்ள நீர் வடிந்து ஓட முடியாது காணப்படுவதுடன், கிராமங்களில் வெள்ளம் பாதிப்பும் ஏற்பட வாய்ப்புள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

# உர தடையை நீக்குங்கள்!

## அரசிடம் கோருகின்றார் தயாசிறி

கொழும்பு, ஒக். 14

இரசாயன உரத்துக்கான தடையை நீக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய இராஜாங்க அமைச்சர், உரப் பற்றாக்குறையால் விவசாயிகள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். 96,000 மெற்றிக் தொன் கனிம உரத்தில், 20,000 மெற்றிக் தொன் இந்தியாவிலிருந்து வர உள்ளது. எவ்வாறாயினும், நாட்டுக்கு அவை வரும் திகதி அறிவிக்கப்படவில்லை.

சீன நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்ய திட்டமிட்ட கனிம உரங்களில் தீங்கு விளைவிக்கும் பற்றீரியா இருந்ததால், அது நிராகரிக்கப்பட்டது. எனவே, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கனிம உரத்தையும் சோதனை செய்யவேண்டும்.

அம்பாறையில் உள்ள விவசாயிகளுக்கு 8,000 மெற்றிக் தொன் கனிம உரமும் குருநாகலில் விவசாயிகளுக்கு 10,000 மெற்றிக் தொன்னும் தேவை.

எனவே இரசாயன உரத்தைப் பயன்படுத்த அனுமதிக்கவேண்டும் அல்லது இரசாயன மற்றும் கனிம உரங்களின் பயன்பாட்டை அறிமுகப்படுத்த வேண்டும் - என்றார்.

# அர்ஜுன் மகேந்திரன் இல்லாமல் வழக்கை தொடர கோரிக்கை

கொழும்பு, ஒக். 14

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் இல்லாமல் மத்திய வங்கிப் பிணை முறி மோசடி வழக்கை தொடருமாறு சட்டமா அதிபர் கொழும்பு உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மகேந்திரன் சிங்கப்பூரில் இருப்பதாக நம்பப்படுகிறது. அவரை இலங்கையில் விசாரணைக்காக நாடு கடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி வெற்றியளிக்கவில்லை.

மகேந்திரனை ஒப்படைப்பது குறித்து இலங்கை மற்றும் சிங்கப்பூர் விவாதத்தில் ஈடுபட்டுள்ளதாக நீதி அமைச்சர் அலி சப்ரி கடந்த டிசெம்பர் மாதம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கை சட்டமா அதிபரின் கோரிக்கை தொடர்பாக, சிங்கப்பூர் சட்டமா அதிபர் சில விளக்கங்களை கோரியுள்ளார்.

இந்நிலையில், அர்ஜுன் மகேந்திரன் இல்லாமல் பிணை முறி மோசடி வழக்கை தொடருமாறு சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

# இராகலை தீ விபத்து; பெற்றோல் வாங்கியவர் கைது

கொழும்பு, ஒக். 14

5 உயிர்களை பலியெடுத்த இராகலை முதலாம் பிரிவு தீ விபத்து சம்பவம் தொடர்பாக இராகலை பொலிஸாரால் விசாரணை செய்யப்பட்டு வந்த ஒருவரை இம்மாதம் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வலப்பனை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை வலப்பனை நீதிமன்ற நீதிவான் டி.ஆர்.எஸ்.குணதாச இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

சம்பவம் தொடர்பில் இராகலை பொலிஸார் உட்பட மேலும் பல பொலிஸ் குழுக்கள் கடந்த நான்கு நாள்களாக விசாரணையில் ஈடுபட்டு வந்திருந்தன.

இதன்போது சம்பவத்தில் உயிர் தப்பியிருந்த தங்கையா இரவீந்திரனை இராகலை பொலிஸார், கடந்த இரண்டு நாள்களாக பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்து வந்தனர்.

இதன்போது தீ விபத்து சம்பவம் தொடர்பில் ஒரு சில உண்மைகள் வெளிவந்துள்ளன. இரவீந்திரன் சம்பவம் இடம்பெற்ற தினத்தில் இராகலை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் வாங்கியுள்ளமை பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும், வீடு தீப்பற்றி எரிந்தபோது அணைக்க வந்த மக்களிடம் வீட்டில் யாரும் இல்லையென அவர் பொய் கூறினாரெனவும் பொலிஸாருக்கு கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்த அவரை நேற்றுமுன்தினம் பகல் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இம்மாதம் 7 ஆம் திகதி இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இராகலை தோட்டம் முதலாம் பிரிவில் தற்காலிக தனி வீடு ஒன்றில் இரவு 10.15 மணியளவில் தீ விபத்து இடம்பெற்றது.

இந்த தீ விபத்துச் சம்பவத்தில் 6 பேர் வசித்து வந்த வீட்டில் ஒரு வயது மற்றும் 12 வயதுடைய சிறுவன் உட்பட ஐவர் தீயில் கருகிச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

சம்பவத்தில் இராமையா தங்கையா (வயது-61), அவரின் மனைவி செவனமுத்து லெட்சுமி (வயது-57) ஆகியோருடன் மகளான தங்கையா நதியா (வயது-34) இவரின் பிள்ளைகளான சத்தியநாதன் துவாரகன் (வயது13 - முதல் கணவரின் பிள்ளை) மற்றும் மோகன்தாஸ் ஹெரோசன் (வயது 01) ஆகியோரே தீயில் கருகி உயிரிழந்தனர்.

மேலும், இந்த தீ விபத்தில் உயிரிழந்த இரு பிள்ளைகளின் தாயான தங்கையா நதியாவின் இரண்டாம் கணவருக்கு பிறந்த மோகனதாஸ் ஹெரோசனுக்கு முதலாவது பிறந்த நாள் சம்பவ தினத்தன்று இரவு கொண்டாடப்பட்ட பின்னரே தீ விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து சம்பவத்தில் வீட்டில் வசித்து வந்த தங்கையாயாவின் மகனான இரவீந்திரன், மது போதையில் வீட்டுக்கு வெளியே இருந்த நிலையில் உயிர் தப்பியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விவசாயிகள், மீனவர்களின் பிரச்னைக்கு நீதி கோரி வடக்கு, கிழக்கில் போராட்டம்

## 17, 18ஆம் திகதிகளில் நடத்தவுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

**வடக்கு-கிழக்கு மாகாணங்களில் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் தொடர்பாக உள்ள பிரச்னைகளுக்கு நீதி கோரி எதிர்வரும் 17,18ஆம் திகதிகளில் போராட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.**

**யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் விவசாயிகள் உரத்தைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி உள்ளனர். குறிப்பாக தென் பகுதியிலும் இந்தப் பிரச்னையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக தென் பகுதியில் அரசுக்கு எதிராக எதிராக பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் விவசாய அமைச்சரின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

தற்போது நாட்டில் உள்ள கொரோனா தொற்று பரவல் காரணமாக மக்கள் ஓரிடத்தில் ஒன்று சேர்வது நல்ல விடயம் அல்ல. அது சமூகப் பொறுப்புக்கும் மாறானது என்பதை கருத்திற் கொண்டு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து கமநல சேவை நிலையங்களுக்கும் முன்னால் குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்கள் மாத்திரம் ஒரே நேரத்தில் ஒன்றுகூடி எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் 28 கமநல சேவைநிலையங்கள் இருக்கின்றன. அனைத்து நிலையங்களுக்கு முன்னாலும் எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சமூகப் பொறுப்போடு சமூக இடைவெளியை பின்பற்றி விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்னைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஒரே நேரத்தில் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்தவுள்ளோம்.

தெற்கில் உள்ள ஏனைய எதிரணி அரசியல் தலைவர்களுடன் பேசி உள்ளோம். அவர்களும் தங்கள் பிரதேசங்களிலும் இவ்வாறான பிரச்னை காணப்படுவதாகவும் தொடர்ச்சியாக தமது பகுதியில் இந்த போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர். அதாவது எமக்கு பசளை கிடைக்கும் வரை இவ்வாறான போராட்டங்களை முன்னெடுக்க நாம் தீர்மானித்துள்ளோம்.

அதேபோல், வடக்கு மீனவர்கள் அத்துமீறும் இந்திய இழுவைப் படகுகளினால் பல்வேறு பிரச்னைகளை எதிர்நோக்கி வருகின்றார்கள். இந்திய மீனவர்களின் வருகையை நிறுத்துவதற்கு ஏற்கனவே சட்டமூலம் இயற்றப்பட்டு உள்ள நிலையில் அதனை அரசு நடைமுறைப் படுத்த தயங்குகின்றது. குறிப்பாக கடற்தொழில் அமைச்சராக ஒரு தமிழர் இருந்தும், அவர் அதனை நடை முறைப்படுத்துவது மிகவும் இலகுவான விடயம். ஆனால் அவர் அதனைச் செயற்படுத்தா தன் காரணமாக இந்திய இழுவைப் படகுகளின் தொல்லை வடக்குப் பகுதியில் மீனவர்களை பெரிதாக பாதிக்கின்றது. எனவே குறித்த சட்டமூலத்தை நடைமுறைப்படுத்தாமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும்வகையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 17ஆம் திகதி முல்லைத்தீவுக் கடலில் இருந்து பருத்தித்துறைக்கு கடல் வழியாக வந்து அமைச்சருக்கு எதிராக எதிர்ப்புப் போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளோம். அனைத்து போராட்டங்களுக்கும் எமது மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் - என்றார். (அ-03)



# ஜீவன் - சுப்பிரமணியன் சுவாமி சந்திப்பு

கொழும்பு, ஒக். 14

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய பாராளுமன்ற உறுப்பினர் சுப்பிரமணியன்சுவாமிக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையிலான சந்திப்பு இராஜாங்க அமைச்சரின் வதிவிடத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான பரஸ்பர உறவுகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், அமரர். ஆறுமுகன் தொண்டமானின் படத்துக்கு மலர்தூவி, சுப்பிரமணியன்சுவாமி அஞ்சலியும் செலுத்தினார்.

# அரசியலுக்கு வருவாரா யொஹானி?



கொழும்பு, ஒக். 14

"அரசியலுக்கு வரும் எதிர்பார்ப்பு இல்லை. நான் இசைக் கலைஞர். அத்துறையில் பயணிக்கவே விரும்புகின்றேன்." - என்று இலங்கையின் இளம் பாடகி, யொஹானி டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு இசைப்பயணமொன்றை மேற்கொண்டிருந்த அவர் நேற்று நாடு திரும்பினார். விமான நிலையத்தில் வைத்து அவருக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

நீங்கள் அரசிலுக்கு வருவீர்களா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே, இல்லை என அவர் பதிலளித்தார்.

இலங்கையின் இளம் பாடகி, யொஹானி டி சில்வா பாடிய "மெனிக்கே மகே ஹித்தே" என்ற பாடலானது தேசிய ரீதியில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் 'சுப்பர் ஹிட்'டாகியுள்ளது. இளம் தலைமுறையினர் முதல் பெரியவர்கள்வரை அனைவரும் அடிக்கடி செவிமடுக்கும் பாடலாகவும் மாறியுள்ளது.



# ஆளமுடியாவிடின் போய்விடுங்கள்!

## அரசிடம் கூறுகிறார் மனோ

கொழும்பு, ஒக். 14

"ஆள முடியாவிட்டால் விலைவாசியை கட்டுப்படுத்த முடியாவிட்டால், மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாவிட்டால் போய் விடுங்கள். ஆளவேண்டியவர்களை மக்கள் தேர்ந்தெடுப்பார்கள்,"

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்துக்கு, அறிவுறுத்துகின்றார் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் இன்று பொருள்களின் விலை விண்ணைத் தொட்டுள்ளது. தேநீராக இருக்கலாம், பணிஸாக இருக்கலாம், சோற்று பார்சலாக இருக்கலாம். சாதாரண மக்களுக்குரிய அனைத்துப் பொருள்களுமே அதிகரித்துவருகின்றன. பாதீடு மூலமாக சரியான தீர்வை இந்த அரசாங்கம் முன்வைக்கும் என்கின்றனர். நம்பவே முடியாது.

நாட்டை நிர்வகிக்க முடியவில்லை என்றால், பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லையென்றால், ஆளமுடியவில்லை என்றால், போய்விடுங்கள். சரியானவர்களை மக்கள் தேர்ந்தெடுப்பார்கள்-என்றார். (அ)

# சீனியின் விலையும் உயர்கிறது

கொழும்பு, ஒக். 14

சீனி விலை நெருக்கடி தொடர்ந்தும் சந்தையில் நிலவி வருகின்றது.

கட்டுப்பாட்டு விலையை விட அதிகமாக வியாபாரிகள் சீனி விற்பனை செய்வதாக மக்கள் நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

தற்போது கொழும்பில் சீனியின் மொத்த விலை 130 ரூபாய் என்றும் சில்லறை விலை நேற்று முன்தினம் வரை 138 ரூபாயாக உயர்ந்துள்ளதாக கோட்டை மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# வல்லிபுரம், செல்வச்சந்நிதி ஆலயங்களுக்குள் சப்பாத்து அணிந்து சென்ற பொலிஸ் அதிகாரி

யாழ்ப்பாணம், ஒக். 14

இந்து மத நியதிகளை மதிக்காமல் வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயங்களுக்குள் சப்பாத்துடன் சென்ற பொலிஸ் அதிகாரி தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கொட்டாச்சி என்பவரே இவ்வாறு மத நியதிகளை மீறி ஆலயங்களுக்குள் சப்பாத்துடன் சென்றுள்ளார்.



யாழ்ப்பாணத்துக்கு நேற்று நண்பகல் வருகை தந்த பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் ஆலய வெளி வீதியில் சப்பாத்துக்களை கழற்றிவிட்டு ஆலயங்களுக்குள் சென்று வழிபாடுகளை முன்னெடுத்த நிலையில் காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சப்பாத்துக்களை கழற்றாது ஆலயங்களுக்குள் சென்றுள்ளார். (அ-2)

ஈழநாடு



# ஓர் அமைச்சரின் தேசபக்த அழைப்பு



நா.யோகேந்திரநாதன்

கடந்த சில வாரங்களின் முன்பு வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன  நாடு சந்தித்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் முகமாக பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்க, தனியார் ஊழியர்களும் தங்கள் ஒரு மாதச் சம்பளத்தை வழங்க வேண்டு மெனக் கேட்டிருந்தார். அதற்கமைவாகச் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது ஒரு மாத ஊதியத்தை அரச நிதிக்கு வழங்கியிருந்தனர். சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தாங்கள் தங்கள் மாத ஊதியத்தின் அடிப்படையில் கடன் பெற்றுள்ளனரெனவும் அதன் காரணமாகத் தங்கள் மாத ஊதியத்தை வழங்க முடியாதெனவும் அறிவித்து விட்டனர்.

அத்துடன் உறக்கத்துக்குப் போய் விட்ட அந்த அழைப்பு தற்சமயம் மீண்டும் துயில் எழுந்து விட்டது. அமைச்சர்தான் அந்த விடயத்தைக் கைவிடவில்லையெனவும் அது தொடர்பாகதான் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கவுள்ளரெனவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கு இப்படி ஓர் ஆசை வந்ததில் ஆச்சரியப்பட இடமில்லை. இலங்கை அரசியலில் ஜனாதிபதியையோ, பிரதமரையோ குளிர வைக்கும் அதிரடி நடவடிக்கைகள் இடம்பெறுவது அப்படி ஒன்றும் அதிசயமல்ல. இப்படியான அறிவித்தல் மூலம் நம்பிக்கைக்குரிய நல்ல அமைச்சராக விளங்க முடியுமென அவர் கருதியுமிருக்கலாம்.

எப்படியிருந்த போதிலும் நாட்டின் அந்நியச் செலாவணி வருமானம் கடன் தவணைப் பணமும் வட்டியும் கட்டமுடியாத நிலையில் சர்வதேச கடன் வழங்கும் நிறுவனங்கள் கடும் நிபந்தனைகளுடன் தயங்கித் தயங்கிக் கடன் வழங்கி வரும் நிலையில், ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. சலுகையை இரத்துச் செய்யும் அறிகுறி தென்படும் இந்த நிலையில் நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்பது உண்மை.

அதிலிருந்து மீள அமைச்சர் மக்களினதும் அரச தனியார் ஊழியர்களதும் பங்களிப்பைக் கோரியுள்ளார்.

இவ்வாறு நெருக்கடிகள் எழுவதும் சில ஆட்சியாளர்கள் மக்களின் பங்களிப்புடன் வெற்றி கண்டும் துரிதமாக முன்னேறியமை உலக வரலாற்றில் இடம்பெறாத சம்பவங்களல்ல.



1960 காலப்பகுதியில் சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்குமிடையே ஏற்பட்ட தத்துவார்த்த முரண்பாடு காரணமாக சோவியத் திடீரென சீனாவுக்கு வழங்கி வந்த அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தையும் இடைநிறுத்தியது. பிரமாண்டமான திட்டங்களை அமுல்படுத்த சீனாவால் முடியாத நிலையில் மாஓ சேதுங் அஞ்சி விடவில்லை.

“யாங்ஷியின் சீற்றத்தைக் கட்டுப்படுத்துவோம்” என்ற அறைகூவலை விடுத்தார். வருடாவருடம் யாங்ஷி நதியில் வெள்ளப் பெருக்கால் பல இலட்சம் சீன மக்கள் மடிந்தனர். எனவே, யாங்ஷிக்கு அணை கட்டுவதன் மூலம் தரிசு நிலங்களையெல்லாம் விளை நிலங்களாக மாற்றவும் சீனாவின் பெரும் பகுதியை மின்சார மயப்படுத்தவும் பல்லாயிரம் மைல்கள் போக்குவரத்தைச் சுலபப்படுத்தவும் முடிவெடுத்தனர். அதன் அடிப்படையில் ஐந்து இலட்சம் மக்கள் உணவுக்கும் உடைக்கும் மட்டும் பணியாற்றுவது எனக் களமிறங்கினர். எந்தவித கனரக வாகனங்களின் துணையுமின்றி உழவு இயந்திரங்கள், ஒரு சில்லு வண்டிகள். மண் வெட்டி, கூடைகள் என்பவற்றைக் கொண்டே வேலைகள் இடம்பெற்றன. இரண்டு வருடங்களில் “யங்ஷி” அணை நிமிர்ந்து நிற்க அதன் மேலால் ரயிலும் வாகனங்களும் என இரு வழித்தடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அதைப் பாடமாகக் கொண்ட ஏனைய சீன மக்களும் தங்கள் கடும் உழைப்பினால் தங்கள் தங்கள் பகுதிகளைச் சுபீட்சமான பூமிகளாக மாற்றினர்.

தமது சொந்த நாட்டு வளங்களிலும் சொந்த நாட்டு மக்களின் உழைப்பிலும் வேகமாக வளர்ச்சியடைந்த சீனா இன்று உலகப் பொருளாதார, இராணுவ, அரசியல் வல்லரசாக உருவாகி விட்டது. ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் அபிவிருத்திக்கு நிதியை அள்ளி வழங்குமளவுக்கு அது வலிமை பெற்றுவிட்டது.

அப்படியோர் ஆசை அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்குமம் வந்திருக்கலாம்.

எனினும், இங்கு ஒரு முக்கியமான கேள்வி எழுகிறது?

இலங்கையில் தற்சமயம் நிலவும் நிலைமையில் மக்கள் வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி பணத்தை வழங்கினால் அது தேசத்தின் அபிவிருத்திக்கும் மக்கள் நலன்களுக்கும் பயன்படுமா அல்லது சில பண முதலைகளின் பைகளுக்குள் போய் விடுமா என்ற கேள்விக்குப் பதில் கிடைக்குமா?

நாட்டில் வெள்ளைப் பூண்டுக்குத் தட்டுப்பாடு நிலவும் நிலையில் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒரு பெரும் மோசடி பணிப்பாளர் ஒருவரின் ராஜினாமா மூலமே அம்பலப்படுத்த

**“ தமது சொந்த நாட்டு வளங்களிலும் சொந்த நாட்டு மக்களின் உழைப்பிலும் வேகமாக வளர்ச்சியடைந்த சீனா இன்று உலகப் பொருளாதார, இராணுவ, அரசியல் வல்லரசாக உருவாகி விட்டது. ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் அபிவிருத்திக்கு நிதியை அள்ளி வழங்குமளவுக்கு அது வலிமை பெற்றுவிட்டது.**

வேண்டியிருந்தது. இவ்வாறு மருந்துக் கூட்டுத்தாபனத்தில் இணையத் தளத்தில் தரவுகளை அழித்து மேற்கொண்ட மோசடி தொடர்பாக இரு தொழில்நுட்பவியளார்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரிசிக்கு விதிக்கப்பட்ட நிர்ணய விலை அரிசி ஆலை உரிமையாளர்களின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டு விட்டது. அதேபோன்று பால்மா, எரிவாயு என்பவற்றின் விலையும் அவற்றின் இறக்குமதியாளர்களின் மிரட்டல் காரணமாக மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அவை ஒருபுறமிருக்க நாட்டின் மிகப் பெரும் மோசடிகளான மத்திய வங்கிப் பிணை முறி மோசடி, அவன்காட் நகரும் ஆயுதக் களஞ்சிய மோசடி போன்ற பல வழக்குகள் பயனுள்ள முடிவுகளைத் தரும் என்பதற்கு எவ்வித அறிகுறியும் இல்லை. பயங்கரக் கொலைக் குற்றவாளிகள், போதைவஸ்து மன்னர்கள் பொது மன்னிப்பில் விடுவிக்கப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு ஒன்றும் முன்வைக்கப்படுகின்றது.

இன்னொருபுறம் கொழும்பு துறைமுக நகரம், வெரப்பிட்டிய மின் உற்பத்தி நிலையம், திருமலை என்ணெய் குதம் என்பன வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏற்கனவே அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு, கொழும்பு மேற்கு முனையம் இந்திய அதானி நிறுவனத்துக்கும் கையளித்தாகிவிட்டது.

இந்த நிலையில் எமது மக்களின் தியாகங்களும் கடும் உழைப்புகளும் எங்கு போய்ச் சேரும் என்பதற்கு அமைச்சர் பந்துல பதில் வழங்குவாரா?

சீனாவில் உயர்மட்டத் தலைவர்களிலிருந்து அடிமட்ட மக்கள் வரை நாட்டுக்காக தம்மை அர்ப்பணித்துப் பணி செய்தனர். அதனால் அந்த நாடு வேகமாக முன்னேறியது.

இங்கு சாதாரண மக்களிடம் கடும் உழைப்பையும், தியாகங்களையும் கோரும் கூட்டம், கொள்ளை இலாபம் அடிக்கும் பெரும் முதலைகளையும் மோசடிக் கும்பலையும் ஊழல் பேர்வழிகளையும் தோளில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கும் வரை நாடு பயன்பெறுமா?

உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை ஊழல் கோலோச்சும் ஒரு நாட்டில் மக்களின் அர்ப்பணிப்பாலும் கடும் உழைப்பாலும் எதையும் சாதிக்க முடியுமா? ■

- அருவி

# கொரோனாவுக்கு பின்னர் பாதுகாப்பான 5 நகரங்கள்



கோவிட் - 19போல நகர வாழ்க்கையை தலை கீழாக புரட்டிப்போட்ட எதையும் சமீப காலங் களில் யாருமே கண்டதில்லை. நகரங் களின் அலுவலகங்கள் மூடப்பட்டது மற்றும் கட்டாய முககவசம் அணிவதில் இருந்து, உணவகக் கட்டுப்பாடுகள் வரை, தொற்றுநோய் முன்னெச் சரிக்கைகள் உலகெங்கிலும் உள்ள நகரங்களின் வாழக்கை முறையையே மாற்றி விட்டன.

இது நீண்ட காலத்திற்கு தொடரும் ஒன்றாக இருக்கக்கூடும். உண்மையில், இந்தப்பெருந்தொற்று, ஒரு “நகரமயமாக்கப்பட்ட” இனமாக, நம்மை மிகப்பெரிய அளவில் பாதித்த முதலாவது நிகழ்வாகும்.

1900 களின் முற்பகுதியில் ஸ்பானிஷ் காய்ச்சல் ஏற்பட்டபோது, 14% மனிதர்கள் மட்டுமே நகரங்களில் வாழ்ந்தனர். ஆனால் இன்று அந்த எண்ணிக்கை 57% ஆக உயர்ந்துள்ளது என்று ஐ. நா. மக்கள் தொகை பிரிவின் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இதன் விளைவாக நகரங்கள் தங்கள் மக்கள் தொகையை சிறப்பாகப் பாதுகாக்க, சுகாதாரம் மற்றும் ஒட்டுமொத்த பாதுகாப்பில் இன்னும் விழிப்புடன் இருக்க வேண்டியிருக்கிறது. எந்த மாற்றங்கள் உயர் பாதுகாப்புக்கு வழிவகுத்தன என்பதை தெளிவுபடுத்துவதற்காக, ‘எக்கானமிஸ்ட்’ இதழின் நிபுணர்கள் பிரிவு, 2021ஆம் ஆண்டின் பாதுகாப்பான நகரங் களின் குறியீட்டை சமீபத்தில் வெளியிட்டது.

பட்டியலின் முன்னணியில் உள்ள நகரங்களில் கோபன்ஹேகன், ரொறன்ரோ, சிங்கப்பூர், சிட்னி மற்றும் ரோக்கியோ ஆகியவை அடங் கும். சமூக ஒருங்கிணைப்பு, மொத்த மக்கள் தொகை உள்ளடக்கம் மற்றும் சமூக நம்பிக்கை ஆகியவற்றின் வலுவான உணர்வுடன், ஒட்டுமொத்த பாதுகாப்பு எவ்வாறு தொடர்புபடுகிறது என்பதை இந்த நகரங்களில் பார்க்கமுடிகிறது.

### கோபன்ஹேகன்

குறியீட்டில் முதல் இடம் பிடித்துள்ளது டென்மார்க்கின் தலைநகர் கோபன்ஹேகன். குறியீட்டின் புதிய சுற்றுச்சூழல் காரணிகள்தான் இதற்கு முக்கிய காரணம். நீடித்ததன்மை, (புதுப்பிக்கவல்ல எரியாற்றல் ஊக்கத்தொகை அளிக்கப்படுகிறது) காற்றின் தரம், கழிவு மேலாண்மை மற்றும் நகர்ப்புற வனப்பகுதி ஆகியன இதில் அளவிடப்பட்டன.

நகரமும் அதன் குடியிருப்பாளர்களும் தொற்றுநோய் கட்டுப்பாடுகளை சமாளிக்க முடிந்ததில், நகர்புற வனப்பகுதி பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் 2021 செப்ரெம்பர் மாதம் முழுமையாக நீக்கப்பட்டு விட்டன.

“பூங்காக்கள்,பசுமையான பகுதிகள் மற்றும் நீர்வழிகள், தொற்றுநோய் காலகட்டத்தில் மிகவும் பிரபலமாக இருந்தன. கோபன்ஹேகன் மக்கள், கையில் உணவை வாங்கிக்கொண்டு நகரத்தின் இயற்கையான காற்று நிலவும் இத்தகைய இடங்களில் சுகமாக நடந்து அந்த இடங்களை அனுபவித்தனர்,” என்று அந்த நகரில் வாழ்பவரும், இலாப நோக்கமற்ற “கோபன்ஹேகன் கெப்பா சிற்றி” அமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரியுமான எஸ்ப்ஜார்ன் ஓவர்கார்ட் கூறினார்.

பாதுகாப்பான நகரங்கள் குறியீடு, ஊழல் தடுப்பு மற்றும் பாதுகாப்பான நகரங்களுக்கு இடையே உள்ள அதிக தொடர்பைக் கண்டறிந்துள்ளது. எனவே உலகின் குறைவான ஊழல் நிலவும் நாடுகளில் ஒன்றாக இருக்கும் டென்மார்க்கில் அதன் குடிமக்கள், தொற்றுநோய் காலகட்டம் முழுவதும் தனது அமைப்புகள் மீதும் ஒருவருக்கொருவர் மீதும் நம்பிக்கை கொண்டிருந்ததில் ஆச்சரியமில்லை.

கோபன்ஹேகன் ஒரு மாபெரும் கோவிட் -19 சோதனைத்திட்டத்தையும்செயல்படுத்தியது. இது சுற்றுலா பயணிகள் உட்பட அனைவருக்கும் இலவசமாக உள்ளது. சேகரிக்கப்பட்ட தரவு, தொற்றுநோயின் விரிவான கண்காணிப்பை அனுமதிக்கிறது. கூடுதலாக இந்த நகரம், தொற்றுநோயை முன்கூட்டியே கண்ட றிய கழிவு நீர் பரிசோதனையை செயல்படுத்த உள்ளது.

### ரொறன்ரோ

கனடாவின் மிகப்பெரிய நகரமான ரொறன்ரோ, உள்கட்டமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அதிக புள்ளிகளுடன் ஒட்டுமொத்த பாதுகாப்புக் குறியீட்டில் நெருக்கமான இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. குறிப்பாக தடுப்பூசி விழிப்புணர்வு மற்றும் அதை பின்பற்றுவது என்று வரும்போது, அனைத்து சமூகங்களையும் இலக்கு வைத்து செய்யப்படும் தகவல்தொடர்புகளை மதிக்கும் உள்ளடக்கிய கலாச்சாரத்தை குடியிருப்பாளர்கள் பாராட்டுகிறார்கள்.

நகரத்தை பாதுகாப்பானதாக ஆக்கிட உதவும் வகையில் சமூகம் சார்ந்த பல தடுப்பூசி திட்டங்களை நகரம் தொடங்கியதை, ரொறன்ரோவில் வசிக்கும் ஃபரீதா தலாத் சுட்டிக்காட்டுகிறார்.

உதாரணமாக, வீட்டை விட்டு வெளியேற முடியாத குடியிருப்பாளர்களுக்கு முதல் டோஸை முடிக்க “ஹோம் பவுண்ட் ஸ்பிரிண்ட் தடுப்பூசி திட்டம்” வெற்றிகரமாக உதவியது. தடுப்பூசி அனைவருக்கும் சமமாக கிடைப்பதை உறுதி செய்ய, தடுப்பூசி முயற்சியின் ஆரம்பத்திலேயே கருப்பின விஞ்ஞானிகள் பணிக்குழு, நிறுவப்பட்டது.

நகரத்தின் பல்லின கலாசாரத்தின் நீண்ட வரலாறு காரணமாக உள்ளூர் மக்கள் பாதுகாப்பாக உணர்கிறார்கள். “ரொறன்ரோவில் வசிப்பவர்கள் கனடாவுக்கு வெளியே பிறந்திருப்பது என்பது மிகவும் இயல்பானது. வெவ்வேறு இன மற்றும் கலாச்சார குழுக்கள் உண்மையில் ஒருவருக்கொருவர் தொடர்புகொள்வதையும், தனிப்பட்டு வாழாததையும் நான் கண்டேன்” என்று 1998 இல் இருந்து இந்த நகரத்தில் வசிக்கும் பிலிப் வெர்னாசா கூறினார்.

“பொதுவாக ஒரு மக்கள் குழுவில், வெவ்வேறு இனங்கள், பாலியல் திசை அமைவுகள் மற்றும் மதங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கலாம். டொரண்டோ மிகவும் திறந்த மனதுடன் இருக்கும் நகரமாகும். அங்கு நீங்கள் யாராக இருந்தாலும் பாதுகாப்பாக இருப்பதை உணர முடியும்.”

### சிங்கப்பூர்

டிஜிற்றல் பாதுகாப்பு, சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்பு பாதுகாப்பு ஆகியவற்றில் இரண்டாவது இடத்தைப் பிடித்த சிங்கப்பூர், தொற்றுநோயின் ஆரம்ப நாட்களில் வேகமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள அந்த பலங்களைப் பயன்படுத்தியது, டிஜிற்றல் கண்காணிப்பு மற்றும் தொடர்புத் தடமறிதலை விரைவாக உருவாக்கியது.

இந்த நாடு உலகின் மிக அதிக தடுப்பூசி விகிதம் கொண்ட நாடாகும் (தற்போது 80%). ஆனால், புதிய திரிபுகளின் அச்சம் காரணமாக கடுமையான கண்காணிப்பு மற்றும் தொடர்பு தடமறிதல் இப்போதும் தேவைப்படுகிறது.

“நகரத்தின் குடியிருப்புவாசிகள், கட்டடங்கள் அல்லது வளாகங்களுக்குள் நுழைவதற்கு முன், SafeEntry செக்-இன்களுக்கு தங்கள் ட்ரேஸ் டூகெதர் டோக்கன் அல்லது ஃபோன் செயலியை ஸ்கேன் செய்ய வேண்டும்,” என்று ஒரு பயண வலைப்பதிவை நடத்தும் சிங்கப்பூர் குடியிருப்பாளர் சாம் லீ கூறினார்.

### சிட்னி

அவுஸ்திரேலியாவின் மிகப்பெரிய நகரமான சிட்னி, குறியீட்டில் ஒட்டுமொத்தமாக ஐந்தாவது இடத்தையும், சுகாதாரப் பாதுகாப்பில் முதல் பத்திலும் இடம்பிடித்துள்ளது.

பெருந்தொற்றின்போது அதன் எல்லைகளை முழுவதுமாக மூடிய நாடுகளில் ஆஸ்திரேலியாவும் ஒன்றாகும். அதிகரித்த தொற்று எண்ணிக்கையை கட்டுப்படுத்த அமல்செய்யப்பட்ட கடுமையான பொதுமுடக்கம் நேர்மறையான விளைவை ஏற்படுத்தியது.

அவுஸ்திரேலியாவில் தனிநபர் கோவிட் இறப்பு விகிதம் உலகின் மிகக் குறைந்த ஒன்றாக உள்ளது. நியூ சவுத் வேல்ஸில் தடுப்பூசிகள் விகிதம் 70% ஐ எட்டியுள்ள நிலையில் பல கட்டுப்பாடுகள் நீக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.சர்வதேச எல்லைகள் நவம்பரில் திறக்கப்படக்கூடும்.

மிகவும் இணைக்கப்பட்ட, பாதுகாப்பான நகரங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட சில கண்டுபிடிப்புகளை இது கோடிட்டுக் காட்டுகிறது. உதாரணமாக, ஒட்டுமொத்த பயன்பாடு, போக்குவரத்து ஓட்டங்கள் மற்றும் பாதசாரிகளின் செயல்பாடு பற்றிய தகவல்களைச் சேகரிக்க, கழிவுத் தொட்டிகள், தெருவிளக்குகள் மற்றும் பெஞ்சுகளில் ஸ்மார்ட் சென்சார்களை எவ்வாறு நிறுவலாம் என்பதை இந்தத் திட்டம் கோடிட்டுக் காட்டுகிறது.

இதேபோல், ஸ்மார்ட் லைட்டிங் மற்றும் சி.சி.ரி.வி நெட்வொர்க்குகள், இரு ளுக்குப் பிறகான பாதுகாப்பு மற்றும் இரவு நேர பொருளாதாரத்தை மேம்படுத் தலாம்.

தங்கள் குடிமக்கள் நகரத்தின் உள்கட்டமைப்புடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறார்கள் என்பதை இதன் மூலம் அவர்கள் நன்கு புரிந்துகொண்டு அதை மாற்றியமைக்க முடியும்.

### ரோக்கியோ

ஜப்பானின் தலைநகரான ரோக்கியோ, ஒட்டுமொத்த பாதுகாப்புக்குறியீட்டில் ஐந்தாவது இடத்திலும், சுகாதாரப் பாதுகாப்பு குறியீட்டின் உச்சத்திலும் உள்ளது.

பொதுசுகாதார வசதி, தொற்றுநோய் தயார்நிலை, ஆயுட்காலம், மன ஆரோக்கியம் மற்றும் கோவிட் -19 இறப்பு போன்ற காரணிகளை சுகாதாரப் பாதுகாப்பு குறியீடு அளவிடுகிறது. ஒலிம்பிக்கின் போது தொற்று எண்ணிக்கை அதிகரித்திருந்தாலும், கிட்டத்தட்ட 60% மக்களை தடுப்பூசிகள் எட்டியதால், விகிதங்கள் வியத்தகு முறையில் குறைந்து விட்டன.

உள்கட்டமைப்பு பாதுகாப்புக்காக டோக்கியோ முதல் ஐந்து வரிசையில் இடம் பிடித்தது. போக்குவரத்து பாதுகாப்பு, பாதசாரிகளுக்கான வசதிகள் மற்றும் போக்குவரத்து நெட்வொர்க்குகள் உள்ளிட்டவை இதில் அடங்கும். ரயில் மூலம் முழுவதுமாக இணைக்கப்பட்ட நகரமான ரோக்யோ, நடந்து செல்வதையும், சமூக ஈடுபாட்டையும் ஊக்குவிப்பதற்காக கட்டப்பட்டது. அக்கம் பக்க குற்றத் தடுப்பு மற்றும் கண்காணிப்பு, குற்றத்தடுப்பில் பகிரப்பட்ட பொறுப்புணர்வு வடிவத்தில் வலுவான குடிமக்கள் பங்கேற்புக்கு இது வழிவகுத்துள்ளது.

ரயில் நிலையங்களில் அதிக எண்ணிக்கையிலான “காணாமல் போன மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களுக்கான” மையங்களில் இருந்து, கிட்டத்தட்ட தேவையற்ற பைக் பூட்டுகள் வரை, மற்றவர்களின் நல்வாழ்வு மீது மிகுந்த மரியாதை உள்ளது,” என்று டோக்யோவில் வசிப்பவரும், தி குளோபல் யூத் ரிவியூ இதழின் நிறுவகருமான சேனா சாங் கூறுகிறார்.

“பல நூற்றாண்டுகளாக நீடிக்கும் கூட்டுவாத கலாசாரம் மற்றும் ஒருவருக்கொருவர் காட்டும் அதீத மரியாதை, நான் வாழ்ந்த இடங்கள் அனைத்தையும் விட பாதுகாப்பான இடமாக ரோக்கியோவை ஆக்கியுள்ளது,” என்று அவர் குறிப்பிட்டார்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் : 1 மணி 15 நிமி.

கல்வி tv CHANNEL

.பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

12. 299+ 11 = ..................................................

13. (4) (9) (3)

இவ்விலக்கங்களைக் கொண்டு உருவாக்கக் கூடிய மிகப் பெரிய எண் எது?

....................................................................................................

14. 3496 இல் இலக்கம் 9 காட்டும் இடம் யாது?

....................................................................................................

15. குவியல் ஒன்றில் 9 பழங்கள் வீதம் 8 குவியல்களில் உள்ள பழங்கள் எத்தனை?

....................................................................................................

16. 924cm எத்தனை m,cm உண்டு?

....................................................................................................

17. ☐ ÷ 9 = 12 எனின் வெற்றுக் கூட்டிற்குள் வரும் எண் யாது?

....................................................................................................

18. ☐ ☐ ☐ ☐ ☐ ☐ ☐ ☐ ☐ ☐

இதில் $\frac{1}{2}$ வாசியை நிழற்றுக.

19. 20,25,30,35 ................................................ அடுத்து வரும் எண் யாது?

20. $\frac{30}{100}$ ஐ தசமமாக எழுதினால் வரும் விடை யாது?

21.

| | | |
|---|---|---|
| 26 | | 32 |
| | 28 | 23 |
| 48 | | 36 |

அடைப்புக்குள் உள்ள எண்களில் 4 இன் மடங்குகளை தெரிவு செய்து எழுதுக.

....................................................................................................

22-46 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

22. நிலத்தில் குழி தோண்டி முட்டையிடுவது
1. நண்டு 2. ஓணான் 3. தவளை 4. வண்ணாத்துப்பூச்சி

23. நன்னீர் நிலத்திலும் வாழ்வது
1. திலாப்பியா 2. திருக்கை 3. தோறர் 4. சுறா

24. நீரிலும் நிலத்திலும் வாழ்வது
1. தவளை 2. மீன் 3. கடற்குதிரை 4. பல்லி

25. இலங்கையின் தேசிய மரம்
1. நாகமரம் 2. வெள்ளரசு 3. ஆல் 4. தேயிலை

26. சிக்குன் குன்யா நோய் பரவுவது
1. வீட்டு ஈயினால் 2. நுளம்பினால் 3. நாயினால் 4. குரங்கினால்

27. தனியாகப் பயன்படுத்தும் பொருட்களில் ஒன்று
1. பருந்து 2. கொக்கு 3. புறா 4. மயில்

28. தனியாகப் பயன்படுத்தும் பொருட்களில் ஒன்று
1. புத்தகம் 2. பென்சில் 3. பற்பசை 4. பற்தூரிகை

29. இலங்கையின் உயரமான மலையாக விளங்குவது
1. பேதுறுதாலகாலமலை 2. நக்கிள்ஸ் 3. நமுனுகுல 4. சிவனொளிபாதமலை

30. தேசியக் கொடியில் உள்ள பச்சை நிறம் குறிப்பது
1. முஸ்லீம் 2. தமிழர் 3. பறங்கியர் 4. சிங்களவர்

# சகலரின் உரிமைகளை உள்ளடக்கிய புதிய அரசமைப்பு விரைவில் வேண்டும்!

## ஜனாதிபதியின் கருத்துக்கு சம்பந்தன் பதில்



கொழும்பு, ஒக்.14

**"எந்தவித தாமதமும் இல்லாது சகல மக்களின் உரிமைகளையும் உள்ளடக்கிய வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடு."**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

"நான் உறுதியளித்தவாறு, புதிய அரசமைப்பு ஒன்றை வழங்குவதற்கு, அடுத்த வருடத்துக்குள் நடவடிக்கை எடுப்பேன்" என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கை இராணுவத்தின் 72 ஆவது ஆண்டு பூர்த்தியையொட்டி அநுராதபுரம், சாலியபுர இராணுவ முகாமில் நடைபெற்ற பிரதான நிகழ்வில் உரையாற்றும்போது தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்த உரைக்குப் பதில் வழங்கும் வகையிலேயே கூட்டமைப்பின் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து ஆராய ஜனாதிபதி நிபுணர் குழுவொன்றை நியமித்தார். அந்த நிபுணர் குழு நியமிக்கப்பட்டு பல மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால், இதன் முன்னேற்றகரமான நகர்வுகள் என்ன, இப்போது எந்தக் கட்டத்தில் இந்த முயற்சிகள் உள்ளன என்று எதுவும் நாட்டு மக்களுக்குத் தெளிவாகத் தெரியாது. எமக்கும் இது குறித்த அறிவிப்புகள் கிடைக்கப்பெறவில்லை.

எவ்வாறு இருப்பினும் அரசியல் சாசனம் ஒன்று புதிதாக உருவாக்கப்படுகின்ற வேளையில் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைகள் சம்பந்தமாக நிரந்தரமான தீர்வு - அதுவும் பக்குவமான தீர்வு கிடைக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்த நாட்டில் முப்பது வருடங்கள் போர் நடைபெற்றது. நாட்டில் நீண்ட காலமாக அமைதியின்மை காணப்பட்டது. இந்தச் சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணம் என்னவென்றால் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைகளை ஆட்சியாளர்கள் பொருட்படுத்தாமை மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை பெற்றுக்கொடுக்க ஆட்சியாளர்கள் நினைக்காதமையாகும்.

தமிழ் மக்களின் இறையாண்மையின் அடிப்படையில் அவர்கள் ஆட்சி அதிகாரங்களைப் பயன்படுத்திக்கொள்கின்ற வகையில் - அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கக் கூடிய வகையில் - தமது ஜனநாயக உரிமைகளுக்கு முறையான அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அவர்கள் செயற்படுகின்றனர்.

தமிழ் பேசும் மக்களின் சகல உரிமைகளும் நாடு முழுவதும் பயன்படுத்தக்கூடிய வகையில் இருக்க வேண்டும். அவ்வாறு அமைய வேண்டும் என்றால் தமிழ் மக்களின் உரிமைகளையும் அங்கீகரித்த - அமுல்படுத்தப்பட்ட அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டால்தான் சாத்தியப்படும். ஆகவே, நாட்டில் முறையான அரசியல் சாசனம் உருவாகினால் மட்டுமே அபிவிருத்தியும், முன்னேற்றமும், அமைதியும் ஏற்படும்.

ஆகவே, எந்தவித தாமதமும் இல்லாது சகல மக்களின் உரிமைகளையும் உள்ளடக்கிய புதிய அரசியல் சாசனம் விரைவாக உருவாக்கப்பட வேண்டும் என்பதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டு நிற்கின்றது" - என்றார். (இ)

# வவுனியா விபத்தில் பெண் ஒருவர் காயம்

வவுனியா, ஒக். 14

வவுனியா - மன்னார் பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா, பூவரசங்குளம் பகுதியில் இருந்து வவுனியா நகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரம் புதிய சாளம்பைக்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது, அதே திசையில் பின்புறமாகப் பயணித்த பிளசர் ரக மோட்டார் சைக்கிள் உழவு இயந்திரத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது உழவு இயந்திரத்தின் பின் பகுதியிலுள்ள கலப்பையில் மோதுண்டு விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வெளிக்குளத்தைச் சேர்ந்த 34 வயதுடைய பெண் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பூவரசங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ)



# குளவி கொட்டி 18 பேர் பாதிப்பு

நோர்வூட், ஒக். 14

நோர்வூட் - ஸ்டொக்ஹம் தோட்டம் தொழிற்சாலைப் பிரிவில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி 18 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முற்பகல் முதலாம் இலக்க தேயிலை மலையில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்தபோது, 17 பெண் தொழிலாளர்களும், ஆண் தொழிலாளி ஒருவரும் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

அவர்களில் ஐவர் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். ஏனையோர் தோட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். (இ)

# புதிய அரசமைப்பு விவகாரத்திலும் தன்னிச்சையாக செயல்படும் அரசு

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 13

"புதிய அரசமைப்பை இயற்றும் விடயத்திலும் அரசு தன்னிச்சையாகச் செயல்பட்டு வருகின்றது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக முன்னெடுக்கப்பட வேண்டிய செயல்பாடு, தனிப்பட்ட சட்டத்தரணிகள் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றது."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் எதிரணியின் பிரதம கொறடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"புதிய அரசமைப்பு இயற்றப்படும், தேர்தல் முறைமை மாற்றப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். நாட்டில் தற்போதுள்ள மிக முக்கிய பிரச்னைகளா இவை?

புதிய அரசமைப்பு பற்றி கதைக்கின்றனர். ஆனால், அதற்கான பணி எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றது? உலகளவில் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஊடாகவே இதற்கான பணி இடம்பெறும். எனினும், தனியாருக்கு ஒப்பந்தம் வழங்குவது போல், தனக்குத் தேவையான சட்டத்தரணிகளை அரசு நியமித்து இதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆலோசனைகளை முன்வைப்பதற்கு எமது கட்சிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. எமது சட்டத்தரணிகள் சென்றனர். 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றி கருத்து வெளியிட வேண்டாம் அதனைவிடுத்து ஏனைய விடயங்கள் பற்றி குறிப்பிடவும் என நிபுணர் குழுவினர் நிபந்தனை முன்வைத்துள்ளனர். எனவே, இவ்வாறு செயல்பட்டால் எப்படி ஏற்றுக்கொள்ளக்கூடிய யாப்பை தயாரிப்பது?

இந்த அரசிடம் குழு வேலைத்திட்டம் இல்லை. தன்னிச்சையான முடிவுகளே எடுக்கப்படுகின்றன. அரசமைப்பின் 19ஆவது திருத்தம் ஊடாக ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டது. எனினும், அரசமைப்பின் 20ஆவது திருத்தம் ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடம் அதிகாரங்கள் குவிக்கப்பட்டன. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்கும் இந்த 20 திருத்தம்தான் காரணம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் தோல்வி. ஐரோப்பிய ஒன்றியத்தில் முதல் சுற்றில் தோல்வி. எதிர்காலத்தில் என்ன நடக்கும் எனத் தெரியவில்லை. மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை நிலைநாட்டினால் மட்டுமே சர்வதேசத்தை வெல்ல முடியும்" - என்றார். (இ)

# வீதியைவிட்டு விலகியது 'கப்'; சாரதி உட்பட இருவர் மரணம்

வெலிமடை, ஒக். 14

'கப்' ரக வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகிச் சென்று விபத்துக் குள்ளானதில் இருவர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் வெலிமடை - ஊவாபரணகம பகுதியில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சம்பவத்தில், கப் ரக வாகன சாரதியும், அதில் பயணித்த மற்றுமொருவரும் உயிரிழந்துள்ளனர். இவர்கள் இருவரும் ஹக்கலை மற்றும் கலஹகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 29 மற்றும் 36 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# போதைப்பொருள்களுடன் திருமலையில் ஒருவர் கைது

திருகோணமலை, ஒக். 14

திருகோணமலை - காந்திநகர் பகுதியில் ஹெரோயின் மற்றும் போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் அவர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து 4 ஆயிரத்து 250 மில்லிகிராம் ஹெரோயினும், 600 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைதானவர் காந்திநகர் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் எனத் தெரியவந்துள்ளது. (இ)

# திருமணம் நடைபெறவிருந்த தம்பியை குத்தி படுகொலைசெய்த அண்ணன்!

மாத்தளை, ஒக். 14

குடும்பத் தகராறு காரணமாக தனது உடன்பிறந்த தம்பியை, மூத்த சகோதரன் ஒருவர், கத்தியால் குத்தி கொலை செய்துள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் மாத்தளைப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் திக்கிரியவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதான ஸ்டீவன் ராஜ் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்தக் கொலையுடன் தொடர்புடைய மூத்த சகோதரன் மாத்தளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். உயிரிழந்த இளைஞருக்கு இம் மாதம் 21ஆம் திகதி திருமணம் நடைபெறவிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாத்தளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ)



உருமறைப்பு களவாய் (camouflage groupers) ஆண் மீன்கள் பல்லாயிரக் கணக்கில் கூடி இனப்பெருக்கத்தின்போது விந்தணுக்களை அவசரமாக வெளியிடும்போது எடுக்கப்பட்ட படம் இது.

இந்தப் படத்தை எடுத்த லோரண்ட் பல்லெஸ்டா இந்த ஆண்டுக்கான சிறந்த வன உயிர் புகைப்பட விருதை வென்றுள்ளார். இவர் 3000 மணி நேரம் நேரில் மூழ்கியிருந்து இந்தப் படத்தை எடுத்துள்ளார்.

# ஸ்பெயின் எரிமலை சீற்றத்தால் மேலும் 800 பேர் வெளியேற்றம்!



மட்ரிட், ஒக். 14

ஸ்பெயினில் ஏற்பட்டுள்ள எரிமலை சீற்றத்தால் மேலும் 800 பேர் வெளியேற் றப்பட்டுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

ஸ்பெயினின் கனரி தீவுகளில் என் றான லா பால்மாவில் கும்ப்ரே வீஜா எரிமலை கடந்த செப். 19ஆம் திகதி எரிமலை குழம்பை கக்கத் தொடங்கி யது.

இதையடுத்து அந்தப் பகுதியிலிருந்து 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வெளியேற்றப்பட்டனர். 25 நாட்கள் கடந்தும் எரிமலையின் சீற்றம் நாளுக் குநாள் அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில், வெளியேறிய எரிமலைக் குழம்பால் 595 ஹெக்ரெயர் நிலப் பரப்பு அழிவடைந்துள்ளன. 1281 கட்டடங்களும் தீயால் அழிந்தன.

இந்த நிலையில், மேலும் சீற்றம் அதிகரித்துள்ளமையால் மேலும், 800 பேர் பாதுகாப்பான இடங்களை நோக்கி வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்க சுமார் 23.7 கோடி அமெரிக்க டொலர்கள் அந்நாட்டு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ)

### ஒப்பனை பொருள், ஷாம்போவில் பயன்படும்

# தாலேட்ஸ் இரசாயனத்தால் ஒரு இலட்சம் பேர் மரணம்!



நியூயோர்க், ஒக். 14

ஒப்பனை பொருட்கள், ஷாம்போ, பொம்மை ஆடைகள் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் தாலேட்ஸ் (phthalates) என்ற இரசாயனத்தால் அமெரிக்காவில் மட்டும் ஆண்டுதோறும் ஒரு இலட்சம் பேர் உயிரிழக்கின்றனர் என்று நியூயோர்க் பல்கலைக்கழகத்தின் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

தாலேட்ஸ் இரசாயனம் பொம்மை, ஆடை, ஷம்போ, ஒப்பனை பொருட்கள், நெகிழி என நூற்றுக்கும் மேற்பட்ட பொருட்களை தயாரிக்கப்படுகின்றது. இந்த இரசாயனம், உடலில் நாளமில்லா அமைப்பை (Endocrine system) பாதிக்கின்றது.

சுற்றுச்சூழல் மாசுபாடு என்ற ஆய்வு பத்திரிகையில் வெளியான இந்த ஆய்வு, பல பொருள்களின் வாயிலாக இந்த நச்சுப்பொருள் உடலில் சென்று உடல் பருமன், நீரிழிவு, இருதய நோய் ஆகியவற்றை ஏற்படுத்துகிறது என ஆய்வு முடிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நியூயோர்க் பல்கலைக்கழகத்தின் கிராஸ்மேன் ஸ்கூல் ஒவ் மெடிசின் நடத்திய இந்த ஆய்வில் 55 வயது முதல் 64 வயது வரை உள்ள 5,000 பேர் கலந்து கொண்டுள்ளனர். சிறுநீரில் அதிகளவு தாலேட்ஸ் இருக்கும்பட்சத்தில் அவர்கள் இருதய நோயால் உயிரிழக்கவும் வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

“அதிகமாக தாலேட்ஸை பயன்படுத்துவதற்கும் முன்கூட்டியே மரணிப்பதற்கும் நிறைய தொடர்புகள் இருப்பது இந்த ஆய்வின் மூலம்

தெரியவந்துள்ளது. எங்களின் முடிவுகள், தாலேட்ஸ் பயன்பாட்டுக்கும் மரணத்திற்கும் உள்ள நேரடி தொடர்பை நிரூபிக்கவில்லை. ஏனெனில், அதன் உயிரியல் வழிமுறைகளை எங்களால் தெளிவாக விளக்க முடியவில்லை. நாங்கள் நினைத்ததைவிட இந்த இரசாயனம் சமூகத்தில் ஏற்படுத்தும் மரணங்கள் அதிகமாக இருக்கின்றன. எனவே, நச்சு நிறைந்த தாலேட்ஸின் பயன்பாட்டை கட்டுப்படுத்தினால் உடல் நலத்தையும் பொருளாதார நிலையையும் காப்பாற்ற முடியும் - என்று ஆய்வை முன்னின்று நடத்திய பேராசிரியர் லியோனார்டோ ட்ரசாண்டே கூறினார். (ஐ)



# நேபாளத்தில் பேருந்து விபத்தில் 28 பேர் உயிரிழப்பு; 10 பேர் காயம்!

காத்மண்டு, ஒக். 14

நேபாளத்தில் மலை உச்சியிலிருந்து பள்ளத்தில் கவிழ்ந்து பயணிகள் பஸ் விபத்துக்குள்ளானதில் 28 பேர் உயிரிழந்தனர். 10 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

நேபாளத்தின் வடமேற்கிலுள்ள முகு பிராந்தியத்தில் நேற்று முன்தினம் மதியம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பேருந்தின் சில்லு ஒன்று திடீரென காற்றுப் போனதால் அதனைக் கட்டுப்படுத்த முடியாது விபத்து சம்பவித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மோசமான வீதிகள், மோசமான வாகன பராமரிப்பு மற்றும் கவனக்குறைவு நேபாளத்தில் கொடிய போக்குவரத்து விபத்துகள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. 2019 ஆம் ஆண்டில் நேபாளத்தில் கிட்டத்தட்ட 13,000 வீதி விபத்துகளில் 2,500இற்கும் மேற்பட்டோர் இறந்தனர் என்று தெரிய வருகின்றது.

(ஐ)

# 40,000 ஆப்கான் அகதிகளை ஏற்பதாக அறிவித்தது கனடா!



றொறன்ரோ, ஒக். 14

ஆப்கானிஸ்தான் நாட்டை சேர்ந்த 40 ஆயிரம் அகதிகளை ஏற்றுக்கொள்வதாக கனடிய அரசாங்கம் அறிவித்துள்ளது. அத்துடன், அகதிகளை மீளக் குடியமர்த்துவதற்கான ஆதரவை அதிகரிக்குமாறு ஏனைய நாடுகளை கனடா வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் தனது ருவிட்டர் பக்கத்தில் பிரதமர் ஜஸ்ரின் ரூட்டோ பதிவிட்டவை வருமாறு,

“கனடா 40,000 ஆப்கான் அகதிகளை வரவேற்கிறது. அகதிகளை பாதுகாப்பாக மீளக்குடியமர்த்துவதற்கு தங்கள் ஆதரவை அதிகரிக்குமாறு மற்றவர்களை நாங்கள் வலியுறுத்துகிறோம்” என்று பதிவிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் ஆட்சியை தலிபான்கள் கைப்பற்றிய பின்னர் அந்த நாட்டில் மனிதாபிமான நெருக்கடிகள் அதிகரித்துள்ளன. இதனால், அந்த நாட்டிலிருந்து ஏராளமான மக்கள் புலம்பெயர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# ரயில் தண்டவாளத்தில் படுத்திருந்த குடியேறிகள் மூவர் நசியுண்டு சாவு!

பாரிஸ், ஒக். 14

ரயில் தண்டவாளத்தில் படுத்துறங்கியவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நால்வர் ரயிலில் நசியுண்டனர். இவர்களில் மூவர் உயிரிழந்தனர் நான்காவது நபர் உடல் சிதைந்த நிலையில் உயிருடன் மீட்கப்பட்டிருக்கிறார்.

பிரான்ஸின் பைரெனீஸ் - அற்லான்ரிகியூஸ் என்ற இடத்தில் நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. உயிரிழந்த மூவரும் ஸ்பெயினில் இருந்து சட்டவிரோதமாக நுழைந்த அல்ஜீரிய குடியேறிகள் எனச் சந்தேகிக்கப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால், அடையாளங்களை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்கள் எதுவும் அவர்களிடம் காணப்படவில்லை என்று கூறப்படுகிறது.

ஸ்பெயின் - பிரான்ஸ் எல்லையில் குடியேறிகளைப் பராமரிக்கின்ற நிலையம் ஒன்றின் சில ஆவணங்கள் விபத்து நடந்த பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. இரவு நேரம் ரயில் தண்டவாளத்தில் உறங்கியவர்களே அதிகாலை வேளை தேசிய ரயில் சேவை நிறுவனத்தின் ரயில் ஒன்றில் நசியுண்டுள்ளனர். அந்த மார்க்கத்தில் இரவு 10.30 மணிக்குக் கடைசி ரயில் பயணிப்பது வழக்கம்.

அதன் பிறகு அடுத்த ரயில் அதிகாலை 5 மணிக்கே அவ்வழியே வருவதுண்டு. இடைப்பட்ட இரவு நேரத்தில் போக்குவரத்து எதுவும் இல்லாததால் குடியேறிகள் தண்டவாளப் பகுதியில் படுத்து உறங்கியிருக்கக் கூடும் என நம்பப்படுகிறது.

மணிக்கு 92 கிலோ மீற்றர் வேகத்தில் பயணித்த ரயிலின் சாரதி மிக அருகே வந்த பிறகே தண்டவாளத்தில் சிலர் படுத்திருப்பதைக் கண்டார் என்றும் அவர் உடனடியாக அபாயச் சமிக்ஞை ஒலியை எழுப்பிய போதும் விபத்தைத் தவிர்க்க முடியாமற் போனது எனவும் பூர்வாங்க விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



# மீண்டும் வருகிறார் அஞ்சலோ மத்தியூஸ்!

கொழும்பு, ஒக். 14

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் இலங்கை அணிக்காக விளையாட தயாராக இருக்கிறார் என்று இலங்கை கிரிக்கெட் சபைக்கு அறிவித்துள்ளார்.

இதனால், மத்தியூஸை மீண்டும் பயிற்சியில் ஈடுபடவும் எதிர்கால சுற்றுப் பயணங்களுக்கான தெரிவில் இணைத்துக் கொள்ளவும் இலங்கை கிரிக்கெட் சபை அனுமதி வழங்கியது.

சம்பள முரண்பாடு மற்றும் தனிப்பட்ட காரணங்களுக்காக மத்தியூஸின் சொந்த விருப்பின் அடிப்படையில் கடந்த ஜூலை மாதம் இலங்கை கிரிக்கெட் அணியிலிருந்து விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### ரொனால்டோ 'ஹட்ரிக்' கோல்!

# உலக கிண்ண தொடருக்கு போர்த்துக்கல் அணி தகுதி!

பார்கியூ டாஸ், ஒக் 14

கிறிஸ்ரியானோ ரொனால்டோ 'ஹட்ரிக்' கோல் அடித்து அசத்த 5- 0 என்ற கோல் கணக்கில் போர்துக்கல் அணி, லக்சம்பேர்க் அணியை வென்றது. இந்த வெற்றியின் மூலம் உலகக் கிண்ணத் தொடருக்கும் தகுதி பெற்றது போர்த்துக்கல்.

2022 கட்டாரில் நடக்கும் உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெறுவதற்கான போட்டிகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன.

இந்தநிலையில், நேற்று போர்த்துக்கல்லின் பார்கியூ டாஸ் நகரில் இடம்பெற்ற போட்டியில் போர்த்துக்கல் - லக்சம்பர்க் அணிகள் மோதின. இதில், வெற்றி பெற்றதன் மூலம் குழு 'ஏ' இல் இரண்டாவது இடத்தை பிடித்தது போர்த்துக்கல்.

இந்தப் போட்டியில் இரு பெனால்டி (8, 13ஆவது நிமிடங்கள்) வாய்ப்புகளை கோல்



ஆக்கியதுடன் தலையால் முட்டி (83ஆவது நிமிடம்) ஒரு கோலை அடித்தார் ரொனால்டோ. இதன் மூலம், சர்வதேச மற்றும் கழகத்துக்காக தனது 58ஆவது ஹட்ரிக் கோலை அடித்து ரொனால்டோ சாதனை படைத்தார்.

இந்தப் போட்டியில் புருனோ பெர்னாண்டஸ், ஜோவா பல்ஹின்ஹா ஆகியோரும் போர்த்துக்கல் அணிக்காக கோல் அடித்தனர். இதனால், லக்சம்பேர்க் அணியை 0 - 5 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் வீழ்த்தியது. (ஐ)



# இந்திய அணியின் சீருடை அறிமுகம்!

புதுடில்லி, ஒக். 14

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியின் புதிய சீருடை நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது. இருபது - 20 உலகக் கிண்ணத் தொடர் ஐக்கிய அரபு இராச்சியம், ஓமானில் எதிர் வரும்17ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இதில், பங்கேற்கும் இந்திய அணியின் சீருடை நேற்று அறிமுகம் செய்யப்பட்டது. புதிய சீருடையை கோலி, ரோஹித் சர்மா, ஜடேஜா, ராகுல், பும்ரா ஆகியோர் அணிந்து அறிமுகம் செய்யும் புகைப்படம் வெளியானது. (ஐ)

# ஊதியம் பெறாத டோனி!

புதுடில்லி, ஒக். 14

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணியின் ஆலோசகராக செயல்படுவதற்கு எம். எஸ். டோனி ஊதியம் எதனையும் பெறவில்லை என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

போட்டிக்கான இந்திய அணி கடந்த மாதம் அறிவிக்கப்பட்டபோது, அணியின் ஆலோசகராக டோனி அறிவிக்கப்பட்டது எதிர்பாராத திருப்பமாக அமைந்தது. இந்திய அணிக்கு இது வலு சேர்க்கும் முடிவு என்றும் பல்வேறு தரப்பினரும் கருத்து தெரிவித்திருந்தனர்.

ஒருநாள், இருபது - 20 போட்டிகளில் டோனியின் தலைமையில் இந்தியா சிறப்பாக செயல்பட்டது. இதனால், உலகக் கிண்ணத் தொடரில் அவரின் அனுபவம் இந்திய அணிக்கு பலனளிக்கும் என்று கருதப்பட்டது. இந்திய கிரிக்கெட் வரலாற்றில் மிகச்சிறந்த தலைவராக டோனி கொண்டாடப்படுகின்றார். 2007 இருபது - 20 உலகக் கிண்ணம், 2011 ஒருநாள் உலகக் கிண்ணம் என்பவற்றை அவரின் தலைமையில் இந்தியா வெற்றி கொண்டது குறிப்பிடத்தக்கது.



# எல். பி. எல். தொடர் டிசெ. 5இல் ஆரம்பம்

LPL T20
LANKA PREMIER LEAGUE 2020

கொழும்பு, ஒக். 14

எல். பி. எல். எனப்படும் லங்கா பிறீமியர் லீக் இருபது- 20 கிரிக் கெட் போட்டி எதிர்வரும் டிசெம் பர் 5 ஆம் திகதி கொழும்பு, ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

முதல் போட்டியில் காலி - யாழ்ப்பாணம் அணிகள் மோதவுள்ளன. தொடரின் முதல் சுற்றின் 20 போட்டி கள் கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறும்.

இறுதிச் சுற்று ஆட்டங்கள் அம் பாந்தோட்டை, சூரிய வெவ மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும். லீக்கின் இறுதி போட்டி டிசெம்பர் 23ஆம் திகதி இடம் பெறவுள்ளது. எல். பி. எல். எனப்படும் லங்கா பிறீமியர் லீக் கடந்த வருடம் தொடங்கியது. உள்நாட்டு, வெளி நாட்டு வீரர்கள் பங்கேற்கும் இந்தப் போட்டியில் 5 அணிகள் பங்கேற்கின்றன. மொத்தம் 24 போட்டிகள் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு



# கொதிக்கின்றது எமது வயிறு; மரண சான்றிதழ் வேண்டாம்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம்

வவுனியா, ஒக். 14

**1700ஆவது நாளாக சுழற்சி முறையில் போராட்டத்தை முன்னெடுத்து வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.**

வவுனியா, ஏ - 9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக உள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டக் கொட்டகை முன்பாக நேற்றுக் காலை குறித்த போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மார், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளையும், காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளின் புகைப்படங்களையும் தாங்கியிருந்தனர்.



இதன்போது அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

“1700 ஆவது நாளாக நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம். எங்களது பிள்ளைகளுக்கு எந்தவொரு தீர்வும் எட்டப்படவில்லை. ஜனாதிபதி மரணச் சான்றிதழ் வழங்குவதாகக் கூறியுள்ளார். எந்தவொரு தாயும் மரணச் சான்றிதழ் வாங்குவதற்குத் தயாராக இல்லை. அதை ஜனாதிபதி சொன்ன நாளில் இருந்து தாய்மார் தேம்பித் தேம்பி அழுகின்றார்கள். ஜனாதிபதி அமெரிக்கா சென்று தனது பேரப்பிள்ளையைத் தூக்கி மழலை பொழிகின்றார்.

நாங்கள் எமது பிள்ளைகளை ஒப்படைத்து விட்டு போராடிக் கொண்டிருக்கின்றோம். ஜனாதிபதிக்கு இருக்கின்ற பாசம் தானே எங்களுக்கும் எங்கள் பிள்ளைகள் மேல் இருக்கும். அம்மா என்று சத்தம் கேட்கும்போது எமது வயிறு கொதிக்கின்றது. கண்கண்ட சாட்சியங்கள் இருக்கின்றன. கோட்டபாய துரோகி. எவ்வாறு நாம் ஒப்படைத்த பிள்ளைகளுக்கு மரணச் சான்றிதழ் வழங்க முடியும்” - என்றார். (இ)




# யாழ். போதனா மருத்துவமனைக்கு நேயம் பவுண்டேஷன் நிதியுதவி!

யாழ்ப்பாணம், ஒக். 14

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு இன்சுலின் ஊசி செலுத்தும் கருவி கொள்வனவுக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி உதவியை நேயம் பவுண்டேஷன் நிறுவனம் வழங்கியுள்ளது.

இந்தத் தகவலை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அகஞ் சுரக்கும் பிரிவின் மருத்துவர் மகாலிங்கம் அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சிறுவர்களுக்கு, அரசாங்கத்தால் இன்சுலின் ஊசி மருந்து வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு, நீண்ட காலமாக காணப்படுகின்றது. இந்த நிலையில், இன்சுலின் ஊசி மருந்து செலுத்தும் கருவி வழங்கி உதவுமாறு மருத்துவமனை நீரிழிவு கழகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

நீரிழிவு கழகத்தின் முயற்சியின் பலனாக நேயம் பவுண்டேஷன் இன்சுலின் ஊசி போடுவதற்கான கருவியை கொள்வனவு செய்ய நிதியுதவி அளித்துள்ளது.

# வெகுவிரைவில் பஞ்ச நிலைமை

## தேசிய தொழிற்சங்க முன்னணி எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 14

அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பு கடந்த குறுகிய காலப்பகுதியில் 40 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் இந்ந நிலை நீடிக்குமாக இருந்தால் நாட்டில் வெகு விரைவில் பஞ்ச நிலை உருவாகுமென்றும் தேசிய தொழிற்சங்க முன்னணி  எச்சரிக்கை விடுத்துள்ளது.

தவறான முறையில் இந்த அரசாங்கம் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்கின்றது. இந்த நிலைமை நீடிக்குமாக இருந்தால் எதிர்வரும் குறுகி காலத்தில் பஞ்ச நிலையே உருவாகும். பொருள்களின் விலையைத் தீர்மானிக்கும் பலம் இந்த அரசாங்கத்துக்கு இல்லையென்றும் அந்த சங்கத்தின் உறுப்பினரும் அரசாங்க தாதியர் சங்கத்தின் தலைவருமான சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

# இருவேறு விபத்துக்களில் இரு பெண்கள் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 14

இருவேறு விபத்துக்களில் பெண்கள் இருவர் மரணமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காலி - கொழும்பு வீதி, அம்பலாங்கொடை பிரதான பஸ் தரிப்பிடத்துக்கு அருகில், பாதசாரி ஒருவர் வீதியைக் கடக்க முற்பட்டபோது லொறி ஒன்றுடன் மோதுண்டு பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார்.

ஹிக்கடுவ பிரதேசத்தை சேர்ந்த 51 வயது பெண்ணே உயிரிழந்தார்.

கொழும்பிலிருந்து - காலி நோக்கிப் பயணித்த லொறியே குறித்த பெண்ணை மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த குறித்த பெண் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்படும் போது மரணமடைந்தார்.

விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதியைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை, களுத்துறை தொடங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொஸ்வத்தை பிரதேசத்தில், மத்துகமவிலிருந்து களுத்துறை நோக்கிப் பயணித்த லொறி ஒன்று வீதியைக் கடக்க முற்பட்ட பாதசாரி பெண் ஒருவர் மீது மோதியதில் குறித்த பெண் பரிதாபகரமாக மரணமடைந்தார்.

இவ்வாறு உயிரிழந்த பெண்ணின் பெயர், வயது விவரங்கள் தொடர்பில் இதுவரை கண்டறியப்படவில்லை.

பிரேத பரிசோதனைக்காக நாகொட வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதியைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (இ)

# ஜனாதிபதியுடன் இந்திய இராணுவ பிரதானி சந்திப்பு



கொழும்பு, ஒக். 14

இந்திய இராணுவத்தின் பிரதானி ஜெனரல் மனோஜ் முகுந்த் நாராவணே அவர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

பிராந்தியப் பாதுகாப்பு விடயத்தில் அயல் நாடுகளின் ஸ்திரத்தன்மையை, தமது நாடு அதிகளவில் எதிர்பார்க்கின்றது என்று தெரிவித்தவாறு ஜெனரல் தனது கலந்துரையாடலை ஆரம்பித்தார்.

தான் இராணுவச் சேவையில் ஈடுபட்டிருந்த காலப்பகுதியில், இந்தியாவில் பெற்ற இராணுவப் பயிற்சிகள் மற்றும் தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்ட ஜனாதிபதி, இந்திய இராணுவப் பயிற்சிகளின் மூலம் நம் நாட்டு இராணுவ அதிகாரிகளுக்குக் கிடைக்கும் தலைமைத்துவப் பண்புகள் குறித்து தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

பல தேச எல்லைகளால் சூழ்ந்துள்ள இந்தியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், மலைசார்ந்த கடினமான பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கான நலத்திட்டங்கள் மற்றும் தலைமைப் பயிற்சி பெறும் அதிகாரிகளுக்காக  இந்திய இராணுவ அதிகாரிகள் பரிந்துரைக்கும் தரநிலைகள் போன்ற விடயங்களை, ஜெனரல் மனோஜ் முகுந்த்திடம் ஜனாதிபதி கேட்டுத் தெரிந்துகொண்டார்.

படைப் பிரிவொன்றின் தளபதியாக நியமனம் பெற்ற பின்னரே, தலைமைத்துவப் பயிற்சிகளுக்காக இந்திய இராணுவ அதிகாரிகள் அனுப்பப்படுவர் என்று தெரிவித்த ஜெனரல், அந்தந்தத் தரநிலையினர் ஓய்வுபெறும் வயதெல்லைகள் குறித்தும் விவரித்தார்.

இலங்கை இராணுவ அதிகாரிகளில் சுமார் ஆயிரம் பேர், ஒவ்வோர் ஆண்டும் இந்தியாவில் பயிற்சிகளைப் பெறுகின்றனர்.  படைகளின் பிரதானியும் இராணுவத்தள பதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் வேண்டுகோளுக்கமைய, மேற்படி இராணுவ அதிகாரிகளின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக மேலும் 50 இராணுவ அதிகாரிகளுக்கு, எதிர்காலத்தில் விசேட பயிற்சிப் பாடநெறிகளை வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் ஜெனரல் மனோஜ் முகுந்த் தெரிவித்தார்.

இந்திய அமைதிப் படையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, திருகோணமலை - 4ஆம் மைல்கல் பிரதேசத்தில் தான் பணியாற்றிய காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் நினைவுகள், தற்போதைய இந்த விஜயத்தின் மூலம் புதுப்பிக்கப்பட்டுள்ளன என்றும் ஜெனரல் மனோஜ் முகுந்த் தெரிவித்தார்.

முன்னாள் இராணுவ அதிகாரி என்ற வகையில், அந்த நினைவுகள் பற்றிக் கலந்துரையாடக் கிடைத்தமை தொடர்பில் ஜனாதிபதிக்கு அவர் மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்ஷடார்.

இந்திய இராணுவத் தலைமையகத்தின் பயிற்சிகளுக்கான கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் ரஜீவ் தாபர், இராணுவ ஆலோசகர் ஜெனரல் விக்ராந்த் விளாஸ் நாயக், வெளிவிவகாரப் பிரிவின் உறுப்பினர் கேர்ணல் மந்தீப் சிங் தில்லன், ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர். (இ)

## இந்தியர்களால்...

அத்துடன், இந்திய கடற்றொழிலாளர்களின் விவகாரத்தில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிலைப்பாட்டை புரிந்துகொள்வதாகவும், இந்த விடயம் தொடர்பில் இந்திய அரச தலைவர்களுக்கு தெளிவுபடுத்துவார் என்றும் கூறினார்.

இலங்கை வந்துள்ள சுப்பிரமணியன் சுவாமி கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று சந்தித்துப் பேசினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் கடற்றொழில் அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

இந்த சந்திப்பில், எல்லை தாண்டிய அத்துமீறிய சட்ட விரோத தொழில் முறைகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டின் அவசியம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் சுப்பிரமணியன் சுவாமிக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இந்திய கடற்றொழிலாளர்களின் சட்டவிரோத செயல்பாடுகளால் இலங்கையின் வட பகுதி கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்டு வருகின்ற பாதிப்புகள் தன்னால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாக தெரிவித்த சுப்பிரமணியம் சுவாமி, கடல் வளங்களை அழிக்கின்ற ட்றோலர் தொழில் முறை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்ற தன்னுடைய நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தினார்.

மேலும், இவ்விடயம் தொடர்பாக இந்திய மாநிலங்களவையில் உரையாற்றவுள்ளதாகவும் இந்திய தலைவர்களுக்கு தெளிவுபடுத்தி, இதற்கு விரைவான தீர்வொன்றை எடுப்பதற்கு முயற்சிப்பதாகவும் உறுதியளித்துள்ளார். (ஐ)

## கோவிட்...

யுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மார்க் என்றழைக்கப்படும் மருந்து தயாரிப்பு நிறுவனத்தினால் கொரோனா தொற்று நோய்க்காக புதிய வகை மாத்திரையொன்று உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மொல்னுபிரவிர் (Molnupiravir) என்ற பெயரால் இந்த மருந்து அடையாளப்படுத்தப்படுகின்றது. கோவிட் - 19 தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக பல்வேறு உலக நாடுகள் இந்த மாத்திரயை பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றன.

மருந்து உற்பத்தி மற்றும் ஒழுங்கப்படுத்தல் இராஜாங்க அமைச்சு என்ற அடிப்படையில், இது தொடர்பில் விசேட குழுவின் நிலைப்பாட்டை அறிந்து, இலங்கைக்கு அந்த மாத்திரைகளை கொண்டுவருவதா? அவ்வாறு கொண்டுவருவதானால் எப்போது கொண்டு வருவது? எந்தளவு கொண்டுவரவேண்டும் என்ற விடயங்கள் தொடர்பில் ஆலோசனைகளை பெற்றுக்கொடுக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரியுள்ளேன்-என்றார்.

இந்த மாத்திரை இதுவரை பரிசோதனை மட்டத்திலேயே இருந்து வருகின்றது. இருந்தபோதிலும், இந்த மாத்திரையில் ஆரம்பகட்ட பரிசோதனை நடவடிக்கைகள் வெற்றியடைந்துள்ளனவென வைத்திய நிபுணர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

இந்த மாத்திரைகள் முறையாக வழங்கப்படும்போது கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் மற்றும் மரணங்களின் வீதம் என்பவற்றை குறைத்துக்கொள்ளக்கூடியதாக இருக்குமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அவுஸ்திரேலியா, தென் கொரியா மற்றும் மலேசியா உள்ளிட்ட சில நாடுகள் இதுவரை இந்த மாத்திரையை பெற்றுக்கொள்வதற்கு ஆர்வம்காட்டி வருவதாக மார்க் நிறுவனம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அத்துமீறிய...

இந்திய மீனவப் படகுகள் ஈடுபட்டிருந்தன என்று கூறப்படுகின்றது. இதேசமயம் பருத்தித்துறை மீனவர்களின் வலைகள் இந்திய ட்ரோலர்களால் அறுக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து இரு தரப்பு மீனவர்களும் நேற்று கைகலப்பில் ஈடுபட்டனர். இதன்போது இந்திய மீனவர்கள் கூரிய ஆயுதங்கள் மற்றும் கற்களால் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் பருத்தித்துறை முனையை சேர்ந்த தீபன், சுரேஸ்குமார், ரவிக்குமார் ஆகிய மீனவர்கள் சிறிய காயங்களுக்கு உள்ளாகினர் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும், இந்திய மீனவர்கள் தாக்குதலுக்கு தயாராக கற்கள் உள்ளிட்ட பொருட்களை எடுத்து வந்திருந்தனர் என்று பருத்தித்துறை மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மோதல் தீவிரமடைந்த நிலையில் இலங்கை கடற்படையினர் அங்கு சென்றபோது இந்திய மீனவர்கள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர் என்றும் மீனவர்கள் தெரிவித்தனர். (ஐ)

## கொரோனா...

ழந்தவர்கள் என அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, நாட்டில் கோவிட் - 19 தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 13,408 ஆக அதிகரித்துள்ளது.

இதன்படி, நேற்றுமுன்தினம் உயிரிழந்தவர்களில் 30 வயதுக்கு உட்பட்ட எவரும் உயிரிழக்கவில்லை.

மேலும், 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 4 ஆண்களும் 4 பெண்களும், 60 வயதுக்கு மேற்பட்ட 16 ஆண்களும் 07 பெண்களும் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கரன்ன...

சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி அவந்தி டி பெரேரா இந்த விடயத்தை மன்றில் அறிவித்தார்.

இதேவேளை, சாட்சிகளை முறையாக பரிசீலிக்காமல், 11 இளைஞர்களை கடத்தி காணாமல் ஆக்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் முன்னாள் கடற்படை பேச்சாளர் டீ. கே. பி. தசநாயக்க உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா என கொழும்பு விசேட மூவரடங்கிய மேல் நீதிமன்றம் நேற்று சட்டமா அதிபரிடம் வினவியது.

முன்னாள் கடற்படை பேச்சாளர் டீ. கே. பி. தசநாயக்க உள்ளிட்ட ஏனைய பிரதிவாதிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பிலான சாட்சியங்களை மீள்பரிசீலனை செய்வதற்கு சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளார் என்று சட்ட மா அதிபர் சார்பில் ஆஜராகிய அரச சிரேஷ்ட சட்டத்தரணி யுஹான் அபேவிக்ரம மன்றில் அறிவித்த சந்தர்ப்பத்திலேயே நீதிபதிகள் குழாம் இந்த கேள்வியை எழுப்பியது.

இந்த வழக்கு சம்பா ஜானகி ராஜரத்ன, அமல் ரணராஜா மற்றும் நவரத்ன மாரசிங்க ஆகிய நீதிபதிகளைக் கொண்ட குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், இந்த வழக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர். (ஐ)

## நேற்று

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 438 பேர் குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 91 ஆயிரத்து 238 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)



# ஜனாதிபதி கோட்டாபயவுடன் சுப்பிரமணியன்சுவாமி சந்திப்பு

கொழும்பு, ஒக். 14

பாரதீய ஜனதா கட்சியின் சிரேஷ்ட அரசியல்வாதியும் மாநிலங்களவை உறுப்பினருமான சுப்பிரமணியம் சுவாமிக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பொன்று, ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

பல அமைச்சுப் பொறுப்புக்களை வகித்திருக்கும் சுப்ரமணியம் சுவாமி, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வலுவான நட்புறவுக்காக முன்னிலை வகித்திருப்பதோடு, இலங்கையில் நிலவிய பயங்கரவாத நடவடிக்கைகளைத் தோற்கடிப்பதற்கான இந்தியா ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்றும் வலியுறுத்தியிருந்தவர்.

பொருளாதார நிபுணரும் புள்ளியியல் வல்லுநருமான சுப்ரமணியம் சுவாமி, பாதுகாப்புச் செயலராக ஜனாதிபதி பதவி வகித்த காலப்பகுதியில் நடத்தப்பட்ட மாநாடுகளின்போது, விரிவுரையாளராகவும் கலந்துகொண்டிருந்தார்.

சுப்பிரமணியன் சுவாமியை இம்முறை இலங்கை விஜயத்தின்போதும் சந்திக்கக் கிடைத்தமையிட்டு, ஜனாதிபதி மகிழ்ச்சி தெரிவித்தார். (அ)

# யோஷித ராஜபக்ஷ எனக்கு சவாலாக இருக்கமாட்டார்!

## கூறுகின்றார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, ஒக். 14

வடமேல் மாகாணத்தில் வசித்துவரும் தனக்கு எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மகனான யோஷித ராஜபக்ஷ எந்த வகையிலும் சவாலாக விளங்கமாட்டார் என இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

குருநாகலில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்குபற்றியதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், வடமேல் மாகாணத்தில் முதலமைச்சர் வேட்பாளராக யோஷித ராஜபக்ஷ போட்டியிடுவது தொடர்பான தகவல் வெறும் வதந்தி மாத்திரமே, அவ்வாறு அவர் போட்டியிடுவாரா, இல்லையா என்பதை அந்த தருணத்தில் அவர் தீர்மானிப்பார் என்றும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# “மீண்டும் சிவப்பு வலயத்துக்கு இலங்கை நுழையும் அபாயம்!”

கொழும்பு, ஒக். 14

“நாட்டு மக்கள் பொறுப்புடன் செயல்படாவிட்டால் நாடு மீண்டும் சிவப்பு வலயத்துக்கு நுழையும் அபாயம் உள்ளது. எனவே, நாட்டை பச்சை வலயத்தில் தொடர்ந்தும் பேணுவது மக்களின் கடமையாகும்.”

- இவ்வாறு சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளர் நாயகம் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

மேலும், “இலங்கை சிவப்பு வலயத்திலிருந்து பச்சை வலயத்துக்கு முன்னேறியுள்ளது. கொரோனாத் தொற்றுப் பரவலைக் குறிப்பிடத்தக்க அளவு கட்டுப்படுத்தும் நாடுகள் பச்சை வலயத்தில் சேர்க்கப்படும்.

நாட்டில் பதிவாகும் நாளாந்தக் கொரோனா உயிரிழப்பு மற்றும் தொற்று எண்ணிக்கையின் அடிப்படையில் சுகாதார ஸ்தாபனம் உட்பட பல சர்வதேச அமைப்புகள் இலங்கையை மீண்டும் பச்சை வலயத்துக்குள் அனுமதித்துள்ளன” - என்றார். (இ)

## ரஜமகா..

பிரசித்தி பெற்ற பெல்லன்வில ரஜமஹா விகாரையில் இந்த கைக்குண்டு நேற்று பிற்பகலில் கைப்பற்றப் பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

விகாரையில் துப்பரவுப் பணியில் ஈடுபட்டிருந்த நபரால் கைக்குண்டு இருப்பது கண்டறியப்பட்டு பின்னர் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

குறித்த இடத்துக்கு விரைந்த குண்டு செயலிழப்பு பிரிவின் உதவியுடன் பொலிஸார் கைக்குண்டை செயலிழக்க செய்தனர் என தெரிவிக்கப்பட்டது.

கைக்குண்டு எப்படி விகாரைக்குள் கொண்டுவரப்பட்டது என்பது பற்றிய விசாரணைகள் தொடர்கின்றன.

இதேவேளை, எதிர்வரும் 20ஆம் திகதி அதிகமான பௌத்த மக்கள் விகாரைகளுக்கு வழிபாட்டுக்காக செல்லவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## அலரி

ஆலய பிரதான குரு துரைசாமி உதய ராகவ குருக்கள் மற்றும் அருண் பிரசாந்தன் சர்மா குருக்கள் ஆகியோரால் பூசைகள் நடத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் இந்தியாவின் ஆளும் கட்சியின் முக்கியஸ்தர் சுப்பிரமணியன் சுவாமி சிறப்பு விருந் தினராகப் பங்கேற்றிருந்தார். அத்துடன், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அவரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவும் இந்து - தமிழ் பாரம்பரிய முறைப்படி வேட்டி மற்றும் சேலை அணிந்திருந்தனர்.

இந்த நிகழ்வில், அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, ஜீவன் தொண்டைமான், பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேன் ராகவன், மருதபாண்டி ரமேஷ்வரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# வடக்கில் வன்முறைகள் அதிகரிப்பதற்கு வேலையில்லா பிரச்னையே காரணம்

## பொலிஸ்மா அதிபரிடம் யாழ். ஆயர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஒக்.14**

**வடக்கில் வேலையில்லாப் பிரச்னை காரணமாகவே வன் முறைச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்றன என்று பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத் னவிடம் யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்தார்.**



வடக்குக்கு விஜயம் மேற்கொண்ட பொலிஸ்மா அதிபர் யாழ். மறைமாவட்ட ஆயரை நேற்று மாலை ஆயர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். குறித்த கலந்துரையாடலின் பின் ஊடகங்களிடம் ஆயர் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“தற்போதைய பொலிஸ்மா அதிபர் எஸ்.எஸ்.பியாக, டி.ஐ.ஜியாக கடமையாற்றி இருந்த ஒருவர். அவர் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் மீது நல்ல விருப்பம் கொண்டவர். இங்குள்ள பிரச்னை தொடர்பில் ஆராய வருகை தந்துள்ள அவர் என்னையும் சந்தித்துள்ளார்.

வடக்கில் இளையோர்கள் வேலைவாய்ப்பில்லாத விரக்தி நிலை காரணமாகவே இங்கு போதைப்பொருள் பாவனைக்கு அதிகளவில் அடிமையாகி வருகின்றனர்.

அதேபோல் பொலிஸார் மக்களுடன் கூடுதலாகப் பழகவேண்டும். மக்களுக்குச் சேவை செய்யத்தான் பொலிஸார் உள்ளனர். இவர்கள் இராணுவத்தினர் அல்லர். எனவே, மக்களுடன் பொலிஸார் நல்ல உறவைப் பேண வேண்டும்.

முன்னைய காலத்தில் வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டன. அதனை மீண்டும் பாடசாலைகளில் ஆரம்பிக்குமாறு நான் கூறி இருக்கின்றேன்.

அதாவது ஆரம்பிப்பதோடு மாத்திரமல்லாமல் விழிப்புணர்வு செயல்பாடுகளும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அத்தோடு இளையோர்கள் வேலைவாய்ப்பின்மை காரணமாகவே வடக்கில் வாள்வெட்டுச் சம்பவங்கள், திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

வேலையில்லாமல் இருப்பவர்களுக்குக் காசு தேவைப்படும்போதுதான் அவர்கள் திருடுவதற்குத் தூண்டப்படுகின்றனர்.

மக்களுக்காகத்தான் பொலிஸார். ஆகவே, பொலிஸார் அதிகளவில் மக்களுடன் தொடர்பைப் பேண வேண்டும்.

குறிப்பாக போக்குவரத்து விதிமுறைகளை மீறுபவர்களுக்குத் தண்டப்பணம் விதிப்பதை விடுத்து அவர்களை ஒரு மணிநேரம் தடுத்து நிறுத்தி அவர்களுக்கு விளக்கம் அளிப்பதன் மூலம்தான் எமது மக்களுக்கு அதன் அர்த்தம் புரியும்.

அதனைச் செயல்படுத்துவதன் மூலம் பொதுமக்களுக்கு போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

தமிழ் பொலிஸார் எமக்குக் கடமைக்குத் தேவையாக உள்ளது. ஏற்கனவே 500 பேர் மாத்திரமே கடமையாற்றி வருகின்றார்கள்.

மேலதிகமாக தமிழ்ப் பொலிஸார் நமக்குத் தேவையாக உள்ளார்கள். அவர்களுக்கு உரிய பயிற்சிகள் வடக்கு மாகாணத்தில் பயிற்றுவிக்கப்பட வேண்டும். ஏனெனில், வடக்கில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் சென்று பயிற்சி பெறுவதற்குப் பலர் விரும்பவில்லை.

இந்நிலையில், வடக்கிலிருந்து பொலிஸுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு இங்கேயே பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களுக்கு மொழிப்பயிற்சியும் வழங்கப்படும் என்று பொலிஸ்மா அதிபர் என்னிடம் கூறினார்” - என்றார்.

(இ - 03)



# மட்டக்களப்பில் தொடர்கின்றது காணி அபகரிப்பு நடவடிக்கை!

## நோர்வே, நெதர்லாந்து தூதுவர்களுக்கு சாணக்கியன் எம். பி. நேரில் விளக்கம்

மட்டக்களப்பு, ஒக். 14

மட்டக்களப்பில் காணி அபகரிப்பு, சட்டவிரோத குடியேற்றம் மற்றும் மண் அகழ்வு உள்ளிட்ட பிரச்னைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன என்றும், தொல்பொருள் திணைக்களத்தின் அத்துமீறல் தொடர்கின்றது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் மற்றும் நெதர்லாந்துத் தூதுவர் ஆகியோரிடம் அவர் இது தொடர்பாக விளக்கமளித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எதிர்கால அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் துரிதமாக முன்னேற்றும் செயற்பாடுகளில் முதன்மையான தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் இயற்கை அழகுடன் காணப்படும் மட்டக்களப்பு மாவட்ட சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் பல திட்டங்கள் பற்றியும் தூதுவர்களுடன் இதன்போது சாணக்கியன் எம். பி. கலந்துரையாடியுள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்று வரும் காணி அபகரித்தல், சட்டவிரோத குடியேற்றம் மற்றும் மண் அகழ்வு உள்ளிட்ட பிரச்னைகள் குறித்த ஆவணமும் தூதுவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (இ)

# நாட்டை பற்றியும் சிந்திக்க வேண்டும்

## சாகர காரியவசம் எம்.பி. கருத்து

கொழும்பு, ஒக். 14

“வயிற்றைப் பற்றி சிந்திக்கும்போது நாட்டைப் பற்றியும் சிந்திக்க வேண்டும், இல்லையேல் எதிர்காலத்தில் எமது சந்ததியினர் எங்கள் மீது, நாட்டைப் பற்றி சிந்திக்கவில்லை என்று சாபமிட நேரிடும்.”

- இவ்வாறு அரசின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொருட்களின் விலையேற்றம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துக் கூறும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.




அவர் மேலும் தெரி வித்ததாவது:-

“நாட்டு மக்கள் சுதந்தி ரம் கிடைத்தது முதல் 70 ஆண்டுகளாக தங்களின் வயிற்றை நிரப்பிக் கொள்வது தொடர்பாக சிந்தித்தனரே தவிர, நாட்டைப் பற்றி சிந்திக்கவில்லை.

உலகளாவிய ரீதியில் நிலவும் கொரோனாத் தொற்றுப் பரவல் நிலைமையால், நாட்டில் பொருட்கள் சேவைகளின் விலைகள் உயர்வடையும் நிலை உருவாகியுள்ளது. இந்த நேரத்தில் இவ்வாறு விலை அதிகரிப்பதைத் தவிர வேறு வழிகள் கிடையாது.

உலக அளவில் பொருட்களின் விலைகள் உயர்வடையும்போது இந்த நாட்டில் மாத்திரம் சட்டங்களைப் போட்டு அவற்றைக் கட்டுப்படுத்த முடியாது” - என்றார். (இ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்- சிவஸ்ரீ.கு.வை.க வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர் இந்து குருமார் அமைப்பு



7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் உளவள துனையாளர் திரு.நா. நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன் ராஜ்குமார்
ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-டால்டி-கானா திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை

**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-
தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு-மறுஒளிபரப்பு
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : அன்னை மரியா (மறுஒளிபரப்பு சனி)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஞானவழி மறு ஒளிபரப்பு ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்